திருவாந்துறைப் படிப்பகம்
சாந்தை சனப, யாழ்ப்பாணம்

Saturday மெயில்
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin
01 - 33
15-05-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=



# பிரிட்டனின் புதிய அரசு குடியேற்றவாசிகள் விவகாரத்தில் இறுக்கமான கொள்கை

பிரிட்டனில் பதவிக்கு வந்திருக்கும் பிரதமர் டேவிட் கமரூன் தலைமையிலான புதிய கூட்டரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சாராத நாடுகளைச் சேர்ந்த குடியேற்றவாசிகள் விவகாரத்தில் மிகவும் இறுக்கமான கொள்கையைக் கடைப்பிடிக்கப் போகிறது.

குடியேற்றவாசிகள் விடயத்தில் மிகவும் நெகிழ்ச்சியான கொள்கையைக் கொண்டிருக்கும் உதவி பிரதமர் நிக்கிளெக் தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சி கூட்டரசாங்கத்தை அமைப்பதற்காக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் கமரூனின் கன்சர்வேட்டில் கட்சியின் குடியேற்றக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இடங் கொடுத்துவிட்டது.

இதன் விளைவாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம்வகிக்காத நாடுகளைச் சேர்ந்த தேர்ச்சித்திறன் கொண்ட தொழில்சார் நிபுணர்களும் மாணவர்களும் பிரிட்டனுக்குச் செல்வதில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கப் போகிறார்கள்.

குடியேற்றவாசிகளின் வருகையை வருடாந்தம் கடுமையாகக் குறைக்கும் நோக்கம் கொண்டதே கன்சர்வேட்டில் கட்சியின் குடிவரவுக் கொள்கையாகும். வருடாந்தம் குறிப்பிட்ட தொகை குடியேற்றவாசிகளையே புதிய கூட்டரசாங்கம் அனுமதிக்கும். அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெளியேயுள்ள நாடுகளைச் சேர்ந்த குடியேற்றவாசிகள் மீது புதிய கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடிய சாத்தியங்களும் இருக்கின்றன.

கன்சர்வேட்டில் கட்சிக்கும் லிபரல் ஜனநாயகக் கட்சிக்கும் இடையேயான புரிந்துணர்வின் அடிப்படையில் கன்சர்வேட்டில் குடிவரவுக் கொள்கையே புதிய கூட்டரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படவிருக்கிறது.

லிபரல் ஜனநாயகக் கட்சியின் குடிவரவுக் கொள்கை பிராந்திய அடிப்படையிலானது. சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு பிரிட்டனில் 10 வருடங்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படவேண்டும் என்பதும் அக்கட்சியின் நிலைப்பாடாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், கூட்டரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னோடியாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இந்த நிலைப்பாடுகளை லிபரல் ஜனநாயகக் கட்சி கைவிட்டுவிட்டது.

1990 களில் பிரிட்டனுக்கு வருடாந்தம் வருகை தந்த குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை மட்டத்துக்கே குடியேற்றவாசிகளை மீண்டும் அனுமதிக்க வேண்டும் என்பதே கன்சர்வேட்டில் கட்சியின் நிலைப்பாடாகும். 1990 களில் ஆயிரக்கணக்கான குடியேற்றவாசிகளே வருடாந்தம் பிரிட்டனுக்கு வருகை தந்தனர். ஆனால், தொழிற்கட்சி அரசாங்கம் வருடாந்தம் இலட்சக்கணக்கான குடியேற்றவாசிகளை அனுமதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(2ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்...

(முன்பக்கத் தொடர்ச்சி)

# மாணவர் விசா முறையை கடுமையாக்க முக்கியமான புதிய விதிகள் விரைவில் அறிமுகம்



'ஐரோப்பிய ஒன்றியத்தைச் சாராத நாடுகளின் பொருளாதாரக் குடியேற்ற வாசிகளில் வருடாந்தம் எத்தனை பேரை வேலை செய்ய அனுமதிப்பது என்பது தொடர்பில் உச்சவரம்பு ஒன்றை அறிமுகப்படுத்தவிருக்கிறோம். அதிகரிக்கும் சனத்தொகை அரசாங்க சேவைகள் மீதும் உள்ளூர் சமூகங்கள் மீதும் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களைக் கருத்தில் எடுத்தே இந்த உச்சவரம்பு தீர்மானிக்கப்படும். பிரிட்டிஷ் சமுதாயத்தின் மீது குடிவரவு ஏற்படுத்துகின்ற பரந்தளவிலான தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வருடமும் உச்சவரம்பு மாற்றியமைக்கப்படும்' என்று புதிய அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கன்சர்வேட்டிவ் கொள்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லைக் கட்டுப்பாடுகளைப் பொறுத்தவரை மிகப் பெரிய ஓட்டையாகத் தற்போது காணப்படும் மாணவர் விசாமுறையைக் கடுமையாக்குவதற்கு முக்கியமான புதிய விதிகளைப் புதிய அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்றும் கொள்கை கூறுகிறது.

'குடியேற்றவாசிகள் பிரிட்டிஷ் சமூகத்திற்குள் உள்வாங்கப்படுவதை ஊக்குவிப்பதற்காக (பிரிட்டனுக்கு திருமணம் செய்யவருகின்ற ஐரோப்பிய ஒன்றியம் சாராத நாடுகளைச் சேர்ந்த குடியேற்ற வாசிகளுக்கு) ஆங்கில மொழிப் பரீட்சையொன்றும் நடத்தப்படும். குடிவரவினால் பிரிட்டன் பயனடைய முடியும். ஆனால், கட்டுப்பாடு எதுவுமற்ற குடிவரவினால் அல்ல. பிரிட்டிஷ் வாழ்க்கையின் சகல அம்சங்களையும் பாருங்கள். வெறுமனே பொருளாதாரத்துக்கு மாத்திரமல்ல வேறு அம்சங்களுக்கும் குடியேற்றவாசிகள் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். விவேகமானவர்களையும் சிறந்தவர்களையும் பிரிட்டனுக்கு வரவழைப்பதற்குத் தொடர்ந்தும் நாம் விரும்புகிறோம். ஆனால், அதற்கான ஏற்பாடுகள் கட்டுப்பாடுகளையும் எண்ணிக்கை மட்டுப்பாடுகளையும் கொண்டதாக இருக்கவேண்டும்' என்று கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

## 'வாழ்நாளில் மிகவும் மோசமான தினம்'



நபர் ஒருவர் சிந்தனைவயப்பட்டவராக தனது கிளாஸை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவ்வாறாக நீண்டநேரமாக அவர் இருந்தபோது அடாவடித்தனமாக நடந்துகொள்ளும் சுபாவமுடைய சாரதியொருவன் மதுபான விடுதிக்குள் பிரவேசித்தான்.

அந்தநபருக்கு அருகே வந்து அமர்ந்த சாரதி அவரின் கிளாஸை பலவந்தமாக எடுத்து அதற்குள் இருந்ததை குடித்துவிட்டான்.

நபர் உடனடியாகவே அழத் தொடங்கினார்.

அவரைச் சாந்தப்படுத்த முயன்ற சாரதி 'நான் ஒரு பகிடிக்காகவே உங்கள் பானத்தை அருந்தினேன், கவலைப்படாதீர்கள், உங்களுக்குத் தேவையான மதுபானத்தை எவ்வளவு வேண்டுமானாலும் நான் வாங்கித் தருகிறேன். எவரும் அழுவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது' என்று கூறினான்.

'நான் மதுவுக்காக அழவில்லை. எனது வாழ்நாளிலேயே இன்றைய தினம்தான் மிகவும் மோசமான தினமாகும்' என்று நபர் பதிலளித்துக்கொண்டு மீண்டும் அழுதார்.

'எதற்காக இன்றைய தினத்தை உங்கள் வாழ்நாளிலேயே மிகவும் மோசமான தினமென்று கூறுகிறீர்கள்' - சாரதி கேட்டான்.

நான் காலையில் நித்திரை விட்டெழுவதற்குத் தாமதமாகிவிட்டது. அதனால் அலுவலகத்துக்கும் தாமதமாகவே சென்றேன். அங்கே எனது உயரதிகாரி கோபமடைந்து என்னை வேலையில் இருந்து நீக்கிவிட்டார். நான் அலுவலகத்தை விட்டு வெளியே வந்து பார்த்தால் எனது காரைக் காணவில்லை. அதை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள். பொலிஸாரும் தங்களால் எதுவுமே செய்ய முடியாது என்று கைவிரித்துவிட்டார்கள். ஒரு டாக்ஸியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு வீடுநோக்கிச் சென்றேன். டாக்ஸியை விட்டு இறங்கி வீட்டுக்கு சென்றபோதுதான் எனது பேர்ஸையும் கிரெடிட்காட்டையும் டாக்ஸிக்குள் தவறவிட்டு விட்டதை உணர்ந்தேன். திரும்பிப்பார்த்தேன், டாக்ஸியும் சென்றுவிட்டது அதன் நம்பரும் எனக்குத் தெரியாது.

''வீட்டுக்கு உள்ளே சென்றபோது எனது மனைவியுடன் எமது பூந்தோட்டத்தைக் கவனிக்கும் வேலைக்காரன் படுத்திருப்பதைக் கண்டேன். வேதனைமிகுதியால் வீட்டைவிட்டு வெளியேறி இந்த மதுபானவிடுதிக்கு வந்தேன். தற்கொலை செய்து என்னுயிரை மாய்த்துக் கொள்வதை விட எனக்கு வேறு வழியில்லை என்ற முடிவுக்குவந்து சிந்தனை வயப்பட்டவனாக நான் இருந்தபோது நீங்கள் வந்து எனது கிளாஸில் இருந்த நஞ்சைக் குடித்து விட்டீர்கள்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்

## 'இளம் எம்.பி.க்களிடையே ஆரோக்கியமான உறவு நீடித்தால் குரோத அரசியலுக்கு முடிவு கட்டலாம்'



'புதிய பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள இளம் எம்.பி.க்களிடையே ஆரோக்கியமான உறவு நீடித்தால் குரோத அரசியலை ஒழிக்க முடியு'மெனத் தெரிவித்துள்ள ஐ.தே.க.சார்பில் கம்பஹா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளம் எம்.பி.யான ருவான் விஜேவர்த்தன நல்லுறவை ஏற்படுத்த ஆளும், எதிர்க்கட்சி இளம் எம்.பி.க்களிடையே விரைவில் கிரிக்கெட் போட்டி இடம்பெறவுள்ளதாகவும் கூறினார்.

*Saturday* மெயிலுக்கு வழங்கிய சிறப்பு பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்த ருவான் விஜேவர்த்தன, தனது அரசியல் பாராளுமன்ற அனுபவங்கள் தொடர்பில் எம்முடன் மேலும் பகிர்ந்து கொண்டவை வருமாறு;

**கேள்வி: உங்களது குடும்பப் பின்னணியைப் பற்றி ?**

**பதில்:** எனது தாய்,தந்தை இரு தரப்பிலும் பரம்பரை பரம்பரையாக அரசியல் சம்பந்தப்பட்டவர்கள் இருக்கின்றனர். எனது தாயார் குடும்பத்தில் இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க தொடக்கம் டட்லி சேனாநாயக்க வரையும் பின்னர் ருக்மன் சேனாநாயக்க என பலரும் அரசியல் செல்வாக்குடையவர்களாக இருந்துள்ளனர். தந்தை தரப்பில் முதலாவதாக டி.ஆர். விஜேவர்த்தனா என் பாட்டனார், அரசியலுக்கு வராவிட்டாலும் ஊடகத்துறையில் இருந்து நாட்டின் சுதந்திரத்துக்காக பெரும் பணியாற்றியுள்ளார். அதேபோல் ஜே.ஆர். ஜெயவர்த்தன, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் புகழ்பெற்ற அரசியல் தலைவர்களாக இருந்துள்ளனர். எனவே, அரசியல் என்பது எனது இரத்தத்திலேயே கலந்திருக்கிறது. நான் இங்கிலாந்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியை மேற்கொண்ட போதும் 3 ஆம் உலக நாடுகளின் அரசியல் பற்றிய பட்டப்படிப்பைக் கற்றேன். உயர்கல்வியை முடித்து இலங்கை திரும்பியதும் ஐ.தே.க.வின் இளைஞர், ஊழியர் அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டேன். அதன் பின்னர் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்ட தற்கிணங்க பியகம தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளர் பதவியை பொறுப்பேற்றுக்கொண்டதன் மூலம் நான் அரசியலுக்குள் பிரவேசித்தேன்.

**கேள்வி: இதுவரையான உங்களது அரசியல் வாழ்க்கை வெற்றி குறித்து?**

**பதில்:** கடந்த வருடம் நடைபெற்ற மேல் மாகாண சபைக்கான தேர்தலிலேயே நான் முதன்முறையாக போட்டியிட்டேன்.இதில் கம்பஹா மாவட்டத்தில் எனக்கு ஐ.தே.க. சார்பாக அதிகப்படியான விருப்பு வாக்குகளுடன் வெற்றி பெறமுடிந்தது. அதன் பின்னர் ஒரு வருடத்தில் அண்மையில் இடம்பெற்ற பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதிலும் என்னால் கம்பஹா மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பாக அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் வெற்றிபெற முடிந்துள்ளது. எதிர்காலத்திலும் இந்த வெற்றியை தொடர்ந்தும் முன்னெடுக்கவே எதிர்பார்க்கிறேன்.

**கேள்வி: முதலாவது பாராளுமன்ற அமர்விலேயே அவசரகாலச்சட்ட நீடிப்பு போன்றதொரு முக்கியமான விவாதத்துக்கு முகம் கொடுத்த உணர்வு எப்படியிருந்தது?**

**பதில்:** அந்தச் சூழ்நிலையானது பல அனுபவங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.நான் முதலாவது பாராளுமன்ற விவாதத்துக்கு முகம்கொடுத்த போது அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான வாக்கெடுப்பிலிருந்து விலகி நிற்க கட்சி தீர்மானித்திருந்தது.அது சரியான முடிவே. அவசரகாலச்சட்ட ஒழுங்குவிதிகளை தளர்த்தப்போவதாக அரசாங்கம் கூறினாலும் அதை எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமாக்கப்போகின்றது என்பது தெரியவில்லை. எவ்வாறிருப்பினும் யுத்தம் முடிந்து ஒரு வருடம் ஆகிவிட்ட நிலையில் மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகளை அரசாங்கம் நிறைவேற்றவேண்டும்.

**கேள்வி: ஆளும் மற்றும் எதிர்த்தரப்புகளில் பாராளுமன்றத்துக்கு பிரவேசித்துள்ள புதிய இளைய எம்.பி.க்கள் இடையேயான உறவு எப்படியிருக்கிறது?**

**பதில்:** இளைய உறுப்பினர்களிடையே சுமுகமானதும் ஆரோக்கியமானதுமான உறவே இருக்கிறது. ஆளுந்தரப்பு இளைஞர் அணிக்கும் எதிர்த்தரப்பு இளைஞர் அணிக்கும் இடையில் கிரிக்கெட் போட்டித்தொடரொன்றை விரைவில் நடத்துவது பற்றியும் பேசப்பட்டு வருகிறது. எனவே, எம்மிடையே ஆரோக்கியமான உறவே நிலவுகிறது.இந்த நிலைமை தொடருமாக இருந்தால் தற்போது இருக்கும் குரோத அரசியல் முடிவுக்கு வந்து கனவான் அரசியல் நோக்கிச்செல்ல முடியுமென நம்புகிறேன்.

**கேள்வி: ஐ.தே.க. உட்கட்சி நெருக்கடி மற்றும் சஜித் பிரேமதாச கட்சி தலைமைத்துவத்துக்கு வருவது பற்றி?**

**பதில்:**கட்சிக்குள் நெருக்கடி இருப்பதாக நான் நினைக்கவில்லை. தலைமைத்துவம், செயற்குழு, பாராளுமன்றக்குழு என கட்சியின் பல பிரிவுகளில் இருந்தும் கட்சியில் யாதேனுமொரு மாற்றத்தைக்கொண்டு வர தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். சகல பதவிகளுக்கான நியமனங்கள் வாக்கெடுப்பின் மூலமே மேற்கொள்ளப்படவேண்டுமென சஜித் பிரேமதாச, தயாசிறி ஜயசேகர, கபீர் ஹாசிம் போன்றோர் யோசனைகளை முன்வைத்துள்ளனர்.புதிய எம்.பி.க்களிடமிருந்தும் யோசனைகள் கோரப்பட்டுள்ளன. எனவே, கட்சியின் செயற்குழு பேசி மறுசீரமைப்பு குறித்து முடிவெடுக்கும்.அத்துடன், சஜித் பிரேமதாச இளைய எம்.பி.யாக இருந்தாலும் நாடு முழுவதும் சகல கிராமங்களிலும் அவருக்கு சிறந்த வரவேற்பு இருக்கிறது.அவருக்கு நிறைய அரசியல் அனுபவமும் இருக்கிறது. அம்பாந்தோட்டை போன்றதொரு கஷ்டமான மாவட்டத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினருடன் போட்டியிட்டு அவர் வெற்றியும் பெற்றிருக்கிறார். அவரது தந்தையும் நாட்டுக்கு அளப்பரிய சேவையாற்றியவர். எனவே, அவ்வாறானதொரு தலைமைத்துவம் எமது கட்சிக்குத் தேவை.

**கேள்வி: அரசியலில் உங்களது இலக்கு என்ன?**

**பதில்:** சகல அரசியல்வாதிகளுக்கும் இலக்கு ஒன்று இருக்கும். அதேபோல், மக்களுடன் ஒன்றிணைந்து மக்களுக்காக பணியாற்றும் போதே அந்த இலக்கை நோக்கி முன்னேற முடியுமென நான் நினைக்கிறேன். நான் பதவிகளை எதிர்பார்த்து அரசியலுக்கு வரவில்லை. நான் எந்த ஸ்தானத்திலிருக்க வேண்டுமென்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும்.

**கேள்வி: இளைய எம்.பி. என்ற வகையில் இந்த நாட்டின் இளைஞர், யுவதிகளுக்குள்ள முக்கிய பிரச்சினையாக எதை கருதுகிறீர்கள்?**

**பதில்:** தொழில்வாய்ப்பின்மை தான் இளைஞர்,யுவதிகளுக்கான முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. கல்வித் தகைமைக்கு ஏற்ற தொழில்வாய்ப்புகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை.க.பொ.த. உயர்தரம் படித்து வெளியேறும் மாணவர்கள் எந்தத்தொழிலை தேர்ந்தெடுப்பது என்று வழிகாட்ட ஏற்பாடுகள் எதுவும் கிடையாது.எனவே, தற்போது எனது தேர்தல் தொகுதியில் இளைஞர் செயலணி ஒன்றை ஏற்படுத்தியுள்ளேன்.அதை மாவட்டம் முழுவதும் விஸ்தரித்து தொழில் பயிற்சிகளை வழங்க எதிர்பார்க்கிறேன். உண்மையாகப் பார்த்தால் இளைஞர்,யுவதிகளின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கம் சரியான பதில் வழங்கவில்லை.

**கேள்வி: அரசியல் தவிர வேறு ஏதாவது துறையில் ஈடுபாடு காட்ட ஆர்வமுண்டா?**

**பதில்:** நான் அரசியலுக்கு பிரவேசிப்பதற்கு முன் ஊடகத்துறையிலேயே ஈடுபட்டிருந்தேன். எமது குடும்பத்துக்கு விஜய நியூஸ் பேப்பர்ஸ் ஊடக நிறுவனம் இருக்கிறது. நான் இங்கு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியதும் அதில்தான் போய்ச் சேர்ந்தேன்.அதன் பின்னரே அரசியலுக்குள் பிரவேசித்தேன் எனவே,ஊடகத்துறையை கைவிட முடியாது. எதிர்காலத்தில் ஊடகத்துறைக்கென வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளும் எதிர்பார்ப்புள்ளது.

**டிட்டோ குகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் எல்லைகளைப் பாதுகாக்க அலிகளின் படைப்பிரிவொன்றைப் பயன்படுத்தலாம் என்ற யோசனையை அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் உள்துறை அமைச்சர் ரகோ டாபி மத்திய அரசாங்கத்துக்கு முன்வைத்திருக்கிறார்.

# எல்லைக் காவலுக்கு அலிகள் படையணி

## சிதம்பரத்துக்கு அருணாச்சல பிரதேச அமைச்சர் யோசனை

அலிகள் நேர்மைக்கு பெயர்போனவர்கள் என்றும் அவர்கள் வரலாற்றிலும் பல கட்டங்களில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

'எனது அபிப்பிராயத்தின்படி அலிகளைப் பொலிஸ் கடமைகளிலும் பரா இராணுவ கடமைகளிலும் ஈடுபடுத்தினால் அவர்களினால் நாட்டுக்கு சிறப்பான சேவையை ஆற்றக் கூடியதாக இருக்கும். அலிகள் சமூகத்தினருக்கென்று தனியான படைப்பிரிவொன்றை இந்தியாவில் ஏன் அமைக்கக் கூடாது? அலிகளுக்கு போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டால் இந்தியாவின் சர்வதேச எல்லைகளில் பயனுறுதியுடைய காவல் பணியை அவர்களினால் செய்யக்கூடியதாக இருக்கும்' என்று மத்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரத்துக்கு எழுதியிருக்கும் கடிதமொன்றில் அருணாச்சல பிரதேச உள்துறை அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

மலைப்பாங்கான அருணாச்சல பிரதேசம் பாதுகாப்பு வேலி அமைக்கப்படாத 1030 கிலோமீற்றர் எல்லையை சீனாவுடன் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முகலாய சக்கரவர்த்திகளின் ஆட்சிக்காலத்தில் அந்தப்புறங்களை கவனிப்பதற்கான பணிகளில் அலிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். நேர்மையான சுபாவத்தைக் கொண்ட அலிகள் ராணிகளின் உதவியாளர்களாகவும் மாளிகையின் காவலர்களாகவும் கூட பணிக்கமர்த்தப்பட்டிருந்தார்கள் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தங்களை ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ கருதாத அலிகள் சுமார் 10 இலட்சம் பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். பொதுவில் பெண்களின் பெயர்களைக் கொண்டிருக்கும் அவர்கள் பெண்களைப் பொன்றே உடைகளை அணியும் பழக்கமுடையவர்கள். இவர்களை 'மூன்றாவது பால்' *(Third Sex)* என்ற பிரத்தியோகமான சமூகமாக அழைக்கிறார்கள்.

சமூகத்தினால் தனிமைப்படுத்தப்படும் அலிகள் வறுமையினால் பெரிதும் பாதிக்கப்படும் பிரிவினராகவும் விளங்குகிறார்கள். பொது இடங்களில் அலிகள் ஏளனம் செய்யப்படுகிறார்கள். இந்தியாவில் இவர்களை 'ஹிஜ்ராக்கள்' என்று அழைக்கிறார்கள். தங்கள் ஜீவனோபாயத்துக்காக அலிகள் பொதுவில் விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

ஹிஜ்ரா சமூகம் இந்தியாவில் 4 ஆயிரம் வருடங்களுக்கும் அதிகமான வரலாற்றைக் கொண்டதாக பதிவுகள் கூறுகின்றன. மூன்றாவது பால் அந்தஸ்து காரணமாக இவர்களுக்கு விசேட வல்லமைகள் இருப்பதாகவும் கருதப்படுகிறது.

இராமாயணம், மகாபாரதம் என்ற இரு பெரும் காவியங்களிலும் அலிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு காவியங்களிலும் இருந்து அலிகள் நம்பிக்கைக்குரியவர்கள் என்பதையும் விசுவாசமாகச் செயற்படக் கூடியவர்கள் என்பதையும் அறிந்துகொள்ள முடியும் என்று அருணாச்சல பிரதேச உள்துறை அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த அமைச்சர் சர்ச்சைக்குரிய கருத்துகளை அடிக்கடி தெரிவித்து செய்திகளில் முக்கிய இடம் பிடித்துக் கொள்பவர் பொலிஸ்காரர்கள் கடமை நேரத்தில் மதுபானம் அருந்துவதை நியாயப்படுத்தி இவர் கடந்த மாதம் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அளவாக மதுவை அருந்தினால் அதனால் உருவாகும் உற்சாகத்தின் காரணமாக பொலிஸ்காரர்கள் தங்கள் கடமைகளை மேலும் துடிப்பாகச் செய்யக் கூடியதாக இருக்குமென்று இவர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## 'சாப்பாடு இல்லையா? படுக்கைக்குப் போகாதே'




கியூபாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலகட்டத்தில் பிடல் காஸ்ட்ரோ தலைநகர் ஹவானாவில் பொதுக் கூட்டமொன்றில் வீராவேசமாக உரையாற்றிக் கொண்டிருந்தார்.

'எமது நாட்டை பட்டினிக் கொடுமையும் துன்பமும் நிறைந்த நாடு என்று அமெரிக்கர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். கியூபாவில் எவருமே சாப்பிடாமல் நித்திரைக்குச் செல்வதில்லை என்பதை அமெரிக்கர்கள் புரிந்து கொள்ள வேண்டும்' என்று அவர் தமதுரையில் குறிப்பிட்டபோது கூட்டத்தினர் மத்தியில் இருந்து ஒருவர் எழுந்து 'தோழரே நான் இன்று சாப்பிடவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? பகலில் சாப்பிடவில்லை இரவுக்கும் எனக்கு சாப்பாடு கிடைக்க வழியில்லை' என்று புலம்பினார்.

காஸ்ட்ரோவிடமிருந்து ஆக்ரோசமான பதில் வந்தது.

'அப்படியா, சாப்பாடு இல்லையென்றால் படுக்கைக்குப் போகாதே'.

## யாருக்குச் சொந்தம்?



விவாகரத்து வழக்கு விசாரணையின் போது பிள்ளையை யார் பொறுப்பேற்பது என்பது குறித்து கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சர்ச்சை மூண்டது.


அந்தப் பிள்ளையைப் பெற்றெடுத்து உலகிற்குக் கொண்டுவந்தது தானே என்பதால் தன்னிடமே பிள்ளையை ஒப்படைக்க வேண்டுமென்று மனைவி நீதிபதியிடம் மன்றாடினார்.

கணவரும் தன்னிடமே பிள்ளையை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டார். 'பிள்ளையை உங்களிடம் தான் ஒப்படைக்க வேண்டுமென்று நீங்கள் விடுக்கும் கோரிக்கையை நியாயப்படுத்த நீங்கள் முன்வைக்கும் வாதம் தான் என்ன?' இது கணவரிடம் நீதிபதி கேட்ட கேள்வி.

கணவன் நீதிபதியிடம் திருப்பிக் கேட்டார்;

'பிரபு, விற்பனை இயந்திரத்தில் ஒரு நாணயக் குற்றியைப் போட்டால் கோக் போத்தலொன்று வெளியே வருகிறது. நாணயக் குற்றியைப் போட்ட எனக்கு கோக் சொந்தமா, அந்த இயந்திரத்துக்குச் சொந்தமா?'

noolaham.org | aavanaham.org



# வீதியோரக் கடைகள் அகற்றலும் பொருட்களின் விலையேற்றமும்

நகரப் பகுதிகளையும் வீதியோரங்களையும் ஆக்கிரமித்திருந்த நடைபாதையோரக் கடைகள் அகற்றப்பட்டமை மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ள அதேவேளை, அவ்வாறான கடைகள் அகற்றப்பட்டதன் பாதக விளைவுகளையும் அவர்கள் எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு நகரப் பகுதிகளிலுள்ள நடைபாதையோரக் கடைகள் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டன. எவரினதும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் எவ்வித கால அவகாசத்தையோ நஷ்டஈடுகளையோ வழங்காமல் மேற்கொள்ளப்பட்ட இந்த அகற்றல் நடவடிக்கை கடும் விமர்சனங்களுக்குள்ளானது.

அதேவேளை, இவ்வாறான நடைபாதையோரக் கடைகளே குற்றவாளிகளின் மறைவிடங்களாகவும் தங்குமிடங்களாகவும் திட்டமிடும் இடங்களாகவும் காணப்படுவதாகவும் அத்துடன் வீதி விபத்துகள், போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட வழிவகுப்பதாகவும் தெரிவிக்கும் அரசு பொதுமக்கள் இந்த நடைபாதையோரக் கடைகளால் பெரும் உடல், உளரீதியான அசௌகரியங்களை எதிர்கொண்டதாகவும் கூறுகின்றது.

அரசின் இக் கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவேயுள்ளது. ஆனாலும் தற்போதைய வாழ்க்கைச் செலவு விண்ணை முட்டும் நிலையில் இவ்வாறான நடைபாதையோரக் கடைகள் மூலமாகவே பொருட்கள் ஓரளவுக்கேனும் குறைந்த விலையில் தம்மால் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்ததாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். இக் கருத்தை உறுதிப்படுத்துவது போலவே தற்போது நிலைமைகள் மாறிவருகின்றன.

குறிப்பாகத் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளைப் பகுதிகளிலுள்ள நடைபாதையோர வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் எந்த நேரமும் வியாபாரம் களைகட்டிக் காணப்படுவதுடன் மக்கள் கூட்டமும் அலைமோதிக் காணப்படும். இதேவேளை, இப்பகுதிகளில் நிரந்தர வர்த்தக நிலையங்களை வைத்திருந்த பலர் பெருநஷ்டமடைந்திருந்தனர்.

இவ்வாறான வர்த்தக நிலைய வாயில்களுக்கு முன்பாகவே நடைபாதை வியாபாரிகள் தமது கடைகளைப் பரப்பி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தனர். தற்போது இக்கடைகள் அகற்றப்பட்டுள்ளதால் நிரந்தர வர்த்தகர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். ஆனால், அவர்கள் இதுவரை அடைந்த நஷ்டங்களை ஈடு செய்வது போல் பொருட்களின் விலைகளைக் கண்டபடி அதிகரித்து விட்டனர்.

இதனால் இதுவரை காலமும் மரக்கறிவகை முதல் பல்வேறு பொருட்களை நடைபாதையோரக் கடைகளில் மலிவாகப் பெற்றுவந்த மக்கள் தற்போது அதிக விலை கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். விலை அதிகமென்றாலும் பொருட்களை வாங்க வேண்டிய நிலையிலேயே மக்கள் உள்ளனர். புறக்கோட்டையிலுள்ள மரக்கறி வகைகளுக்கும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டியில் விற்கப்படும் மரக்கறி வகைகளுக்குமிடையில் 3 மடங்கு வரை விலை வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. நடைபாதையோரக் கடைகள் அகற்றப்பட்டமை தொடர்பில் சிலரின் உணர்வலைகளைப் பார்ப்போம்.

நடைபாதை வியாபாரி ஒருவர் கூறுகையில்;

நாட்டில் யுத்தம் நிலவிய போதும் இப்பகுதியில் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றபோதும் இவர்கள் எம்மை அப்புறப்படுத்தவில்லை. ஆனால், இப்போது தேவையில்லாமல் அப்புறப்படுத்துகிறார்கள்.

மக்களுக்குக் குறைந்த விலையில், இலகுவான முறையில் வியாபாரம் செய்வதனால் பெரிய வியாபாரக் கடைகளுக்குக் கிடைக்கும் இலாபம் எமக்குக் கிடைப்பதில்லை. இவ்வாறு தடை விதித்துள்ளமையால் என்னால் வியாபார நடவடிக்கைகளைச் செய்ய முடியாமலும் இதனை நம்பி வாழ்கின்ற எனது குடும்பத்தைத் தொடர்ந்தும் பராமரிக்க முடியாதுமுள்ளது எனவும் கூறினார்.

இவர்களின் வியாபாரம் தொடர்பாக நிரந்தர வர்த்தகரொருவர் கூறுகையில்;

இது நடைபாதை வியாபாரிகள் எமது வர்த்தக நிலையங்களின் முன் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு வியாபாரம் செய்வதினால் எமது கடைகளுக்குப் பொதுமக்கள் வர முடியாத நிலை உள்ளது.

நாம் வருமான வரி, வர்த்தக வரி, மாநகர சபை எனப் பல வரிகளையும் வர்த்தக நிலையங்களுக்குப் பெருமளவு வாடகைப் பணத்தையும் செலுத்துகின்றோம். ஆனால், இவ்வியாபாரிகள் எவ்வித வரியுமின்றி சொகுசாக உழைக்கின்றனர் எனவும் கூறினார்.

மக்கள் நடந்து செல்வதற்காகவே இந்த நடைபாதையுள்ளது. அதில் இவர்கள் வியாபாரம் செய்வதால் அவ்வழியினால் நடந்து செல்ல முடியாமலுள்ளதுடன் வழிப்பறித் திருடர்கள், போதை வஸ்து வியாபாரிகளுக்கு இவ்வியாபாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கின்றதெனக் கொழும்பு மாநகர சபை அதிகாரியொருவர் கூறினார்.

நடைபாதை வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டமை தொடர்பாக நுகர்வோரொருவர் கூறுகையில்;

'இவர்களின் கடைகளினால் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சல் ஏற்பட்டிருந்தாலும் ஏனைய வியாபார நிலையங்களில் வாங்குவது போன்று அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. நல்ல தரமான பொருட்களைக் குறைந்த விலையில் பெற்றுக்கொண்டோம். ஆனால், இன்று அதேவகையான பொருட்களை வாங்க நிறைய பணம் தேவைப்படுகிறது. கடையில் பொருத்தப்பட்டுள்ள குளிரூட்டிகளுக்கும் சேர்த்தே எம்மிடம் பணம் அறவிடுகின்றனர்' எனவும் கூறினார்.

எமது நாட்டின் அபிவிருத்திப் பணிகளைக் கருத்திற்கொண்டு நடைபாதை வியாபாரம் அகற்றப்பட்டமை சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் கொள்வனவு ஆற்றலின்மையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, நடைபாதை வியாபாரிகளுக்கு உரிய முறையில் வியாபார நடவடிக்கைகளை அமைத்துக் கொடுப்பதன் மூலம் சாதாரண மக்களுக்குத் தங்களது கொள்வனவு நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி இருந்த கிரேக்கம் இப்படி ஆகிவிட்டதே...

ஐரோப்பாவின் மிகப்பெருமைக்குரிய தேசம் கிரேக்கம்.உலக நாகரீகத்தின் பிறப்பிடமாகப் பார்க்கப்பட்ட நாடு. பொருளாதார வளர்ச்சியிலும் அரசியல் ஆளுமையிலும் உலகின் பெரிய வல்லரசுகளுக்குச் சமமான அந்தஸ்து பெற்ற கிரீஸ் இன்று பரிதாப நிலையில்.

முன்னெப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது அந்த நாடு. வர்ணிக்க முடியாத அளவு மோசமான பணவீக்கம், மைனஸ் 3 ஆக பயமுறுத்தும் ஜிடிபி வீழ்ச்சி, மலைக்க வைக்கும் வெளிநாட்டுக் கடன், எங்கும் வேலையின்மை ஓலம்... இனி மீளமுடியுமா என்ற பயத்திலும் சோகத்திலும் மக்கள் நிலைமை கைமீறிப் போனதில் உள்நாட்டுக் கலகம் மீள ஆரம்பித்திருக்கிறது. நாடு தழுவிய புரட்சி வெடிக்குமோ என்ற கேள்வி எங்கும் தொக்கி நிற்கிறது.

என்ன ஆனது இந்த நாட்டுக்கு.. எப்படி இந்த நிலைமை வந்தது?

எல்லாவற்றுக்கும் மூல காரணம் அரசின் தவறான நிதிக் கொள்கைதான். ஐரோப்பிய யூனியனில் முக்கிய அங்கமான கிரீஸ் 2001 ஆம் ஆண்டிலிருந்து யூரோ நாணயத்தை அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தத் தொடங்கியது.வளர்ச்சித் திட்டங்களுக்காக செலவழிக்கிறோம் என்று கூறி பல ஆயிரம் கோடி யூரோக்களை கடன் வாங்கிக் குவித்துள்ளது கிரீஸ்.இன்றைய திகதிக்கு கிரீஸின் கடன் அளவு 300 பில்லியன் யூரோக்கள் நாட்டின் மொத்த உற்பத்தியை விட 125 சதவீதம் அதிகம் இந்தக் கடன்.

கடன்களுக்கான தவணை மற்றும் வட்டியாக மட்டுமே ஆண்டுக்கு பல இலட்சம் கோடி யூரோக்களைச் செலுத்த வேண்டிய கட்டாயம்.ஆனால் கஜானாவில் பணமில்லை. காரணம் உள்நாட்டில் நடக்கும் பெருமளவு வரி ஏய்ப்பு. கடந்த 10 ஆண்டுகளில் கிட்டத்தட்ட இரு மடங்கு வருமானத்தைப் பெருக்கிக் கொண்டவர்கள் வரி செலுத்தவே மறுக்கின்றனர். உற்பத்தியிலும் பெரும் வீழ்ச்சி. கடன்களை மட்டுமே நம்பியிருந்த நாட்டுக்கு அந்தக் கடன்வரத்து முற்றிலும் நின்று போக விழி பிதுங்கியது. நாட்டின் மொத்த உற்பத்தியோ பூஜ்யமாகி, மைனஸுக்கும் போய்விட்டது.

இதையெல்லாம் குறிப்பிட்ட காலம் வரை சாமர்த்தியமாக மறைத்து வந்த கிரீஸ் சமாளிக்க முடியாத நிலையில் இந்த ஆண்டு துவக்கத்தில் உண்மையைச் சொன்னது. அதுவரை கிரீஸ் மீதிருந்த நம்பிக்கையில் கடன் கொடுத்து வந்த பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் இப்போது கடனை திருப்பிக் கேட்கத் தொடங்கியுள்ளன.கிரீஸுக்கு கடன் வழங்கிய ஐரோப்பிய வங்கிகளின் எதிர்காலமே கேள்விக்குறியாக அந்த வங்கிகளின் வாடிக்கையாளர்கள் பயத்தில் தங்கள் வைப்புகளைத் திரும்பப் பெற ஆரம்பித்துள்ளனர்.

இப்படி கிரீஸில் ஆரம்பித்த பொருளாதார நச்சுச் சூழல் ஒட்டுமொத்த ஐரோப்பிய யூனியனையே பாதிக்க இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிக்கலாம் என்று தீவிரமாக ஆலோசித்து வருகின்றன.கிரீஸுக்கு இந்த ஆண்டு 25 பில்லியன் யூரோ அளவுக்கு குறைந்த வட்டிக்கு கடன் அளித்து நிலைமையைச் சமாளிக்க வைக்கலாம் என்று ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் கூட்டத்தில், முடிவெடுக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு நிதி நிறுவனமும் உதவ முன்வந்துள்ளது.ஆனால் கிரீஸ் வாங்கிய பழைய கடன்களுக்கான ஆண்டு தவணையே 55 பில்லியன் யூரோ எனும் போது இந்த 25 பில்லியன் யூரோவை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதற்கிடையே, உள்நாட்டில் நெருக்கடியைச் சமாளிக்க அனைத்துப் பொருள்கள்,பணிகளின் வரிகளை தாறுமாறாக உயர்த்திவிட்டது கிரீஸ் அரசு. உபயம்- சில தனியார் நிறுவன முதலாளிகள் இதனால் கடுப்பான மக்கள் வீதிக்கு வந்துவிட்டனர் போராட. கிட்டத்தட்ட உள்நாட்டுப் போர் மூண்டுவிட்டதோ என்ற அச்சம் ஏற்படுத்தும் அளவுக்கு ஆக்ரோஷமான போராட்டமாக அமைந்துவிட்டது. ஏதென்ஸில் மட்டும் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பங்கேற்றனர். நாட்டின் பிற பகுதிகளிலும் இதே போன்ற கலவரங்கள் மூண்டன. இந்தக் கலவரங்களில் 3 பேர் பலியாகியதும் நடந்தது.


பிரான்ஸ் புரட்சிக்கு முன்பு வெர்சைல்ஸ் நகரில் குவிந்த மக்களின் ஆக்ரோஷத்தைப் படித்திருக்கிறோம். அதை கிரீஸில் நேரில் பார்த்தோம். என்கிறார் ஒரு செய்தியாளர். கிரீஸின் இந்த நிலை ஏற்படுத்தியுள்ள தாக்கம் மிகப்பெரியது. அமெரிக்காவின் வீழ்ச்சி எப்படி உலகம் முழுக்க கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியதோ, அதுபோல கிரீஸின் வீழ்ச்சி ஐரோப்பா மட்டுமின்றி ஆசிய நாடுகளையும் பாதிக்கும் என்கிறார்கள் பொருளாதார அறிஞர்கள்.

கிரீஸின் இந்த வீழ்ச்சியால் யூரோ நாணயத்தின் மதிப்பே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ந்துள்ளது.கடந்த டிசம்பரில் 1.45 டொலராக இருந்த யூரோ மதிப்பு இன்று 1.27 டொலராக குறைந்துவிட்டது.நிலைமை இப்படியே போனால் டொலரை விட யூரோ மதிப்பு குறைந்துவிடும். இதனை ஐரோப்பிய யூனியன் நிச்சயம் விரும்பாது அத்தகைய சூழலில் கிரீஸை ஐரோப்பிய யூனியனை விட்டே கூட விலக்க வேண்டிய நிலை வரலாம் என்கிறார்கள் நிபுணர்கள்.சர்வதேச பங்கு வர்த்தகத்திலும் கிரீஸ் வீழ்ச்சியின் தாக்கம் தெரியத் தொடங்கியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச, தனியார் துறை அலுவலகங்களில் அவமானப்படுத்தப்படும் அப்பாவிகள்



ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் அன்பு, பண்பு, பாசம், அரவணைப்பு என்ற மனி நேயக் குணங்களுக்குள் அல்லது பண்புகளுக்குள் கட்டுண்டு போயிருக்கின்றது.இந்தப் பண்புகளினூடாகவே அந்த மனிதனுடைய சமூக அங்கீகாரம் மதிப்பிடப்படுகின்றது. சமூகத்துடன் இணைந்து வாழ்கின்ற மனிதனே தொடர்ந்தும் நிலைத்து நிற்க முடியும்.

யாழ்.மாவட்டமானது கலை,பண்பாடு, கலாசார நடைமுறைகளில் மிகவும் பெருமை பெற்றது. இந்தச் செயற்பாடுகளினடியாகவே இங்கு மனிதநேயம் மேலோங்கியிருந்த காலம் ஒன்று இருந்தது.ஆனால் சிறியவர் முதல் பெரியவர் வரையான பெரும்பாலானோரிடமிருந்து இந்தக் குணாதிசயங்கள் மறைந்து போய்க் கொண்டிருப்பதை இன்று அவதானிக்க முடிகின்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுகின்ற பெரும்பாலானோரிடம் பண்பாடு, பழக்க வழக்கம் என்பன பூஜ்ஜியமாகவே உள்ளதென்பதை வேதனையுடன் வெளிப்படுத்த வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது. அரச திணைக்களங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்கின்ற பொது மக்களை மந்தைக் கூட்டங்கள் என்றே அவர்கள் கணிப்பீடு செய்து செயற்படுகின்றனர்.

மனிதர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய 'மரியாதை'யில் துளி கூட இந்த மக்களுக்கு வழங்கப்படுவதைக்காண முடியவில்லை. இந்தத்திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்வோரில் கல்வியறிவில் குறைந்தவர்களென்றால் அவர்கள் கீழ்த்தரமாகவே மதிக்கப்படுகின்றனர்.

யாழ்.மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், கிராம சேவையாளர் அலுவலகங்கள்,வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற இன்னோரன்ன நிறுவனங்களில் மக்கள் அன்றாடம் தமது அலுவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் செல்கின்றனர்.இங்கு செல்கின்ற மக்களுக்கு உரிய வகையில் சேவைகள் வழங்கப்படுகின்றதா இல்லையா என்பதற்கு அப்பால் அங்குள்ள சாதாரண சிற்றூழியர் வரை மேலதிகாரி வரை, இந்த மக்களுடன் நடந்து கொள்கின்ற முறைகளால் இவர்கள் மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள்.

வயதில் மூத்தோருக்குக் கூட மரியாதை செலுத்தாத பண்பு இன்று யாழ்.மாவட்டத்திலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தலை விரித்தாடுகின்றது. மனிதர்களின் நோயைப் போக்க வேண்டிய வைத்தியர்கள் மனிதர்களை நாயைப் போல மதிக்கின்ற செயற்பாடு யாழ்.போதனா வைத்தியசாலையில் அரங்கேறுகின்றது. 'நீ அடிக்கடி வருத்தமெண்டு வந்தா நான் என்ன பண்ணுறது. இந்தா இந்தத் துண்டைக் கொண்டு துலை .மருந்தை வாங்கு' என்று ஒரு நோயாளியிடம் வைத்தியர் கூறியிருக்கின்றார். யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் ஆண், பெண் தாதியர்களும் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுகின்ற நோயாளர்கள் விடயத்தில் துளி கூட மதிப்புடன் செயற்படுவதில்லை. நோயாளர்களை எழுந்தமான வார்த்தைகளால் ஏசுகின்ற செயற்பாடுகளே அதிகரித்துள்ளன. போதனா வைத்தியசாலையில் மட்டுமன்றி பிரதேச வைத்தியசாலைகளிலும் இந்தச் செயற்பாடுகளே நடைபெறுகின்றன.

மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவையாளர் பிரிவு போன்ற இடங்களில் பணியாற்றுவோரிடம் பிரதேச மக்கள் தமது தேவைகளுக்கான முறைப்பாடுகளைக் கூறச் சென்றால் 'எல்லாவற்றையும் கடிதம்மூலமாக எழுதிக்கொண்டு வா' என்று பணிக்கப்படுகின்றனர். ஆனால் கடிதமாக எழுதிக்கொண்டு சென்றால் இதென்ன பாரதம் எழுதிக்கொண்டு வந்தனி? உன்ரை கடிதத்தை வாசிச்சுக் கொண்டிருக்க எனக்கென்ன வேலை இல்லையோ! என்று மக்கள் மீது எரிந்து விழுகிறார்கள்.

மக்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொண்டு அவர்களுக்கான தீர்வுகளை, சேவைகளை வழங்குவதற்காகத் தான் அரசாங்கம் தங்களுக்கு சம்பளம் வழங்குகின்றதென்பதை மறந்தவர்களாகவே குடாநாட்டிலுள்ள அரச அதிகாரிகள் பலரும் இன்று செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேலும், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களிலும் தனியார் சிற்றூர்திகளிலும் கடமையாற்றுகின்ற நடத்துநர்கள் பலரிடம் பழக்க வழக்கம்,பண்பாடு, மனிதநேயம் என்பவற்றைத் துளி கூட அவதானிக்க முடியவில்லை. அண்மையில் நான் பஸ்ஸொன்றில் பயணித்துக்கொண்டிருந்தேன். இடையில் வயதான 'அம்மா' ஒருவர் பஸ்ஸில் ஏறி இருக்கையில் அமர்ந்தார். இறங்குகின்ற இடத்தைத் தவறவிட்ட அவர் அங்கலாய்த்துக்கொண்டிருக்கையில் நடத்துநர் அவரைக் கண்டபடி ஏசினார். 'வாலிபத்தில் ஆடியதைப் போல வயதான நேரத்திலும் ஆடுகிறாயா' என்று கடும் சொல்லாலும் ஏசினார்.

இடத்தை தவறவிடுவோர், சில்லறைப் பணம் இல்லாதோர், வேகமாக ஏறி இறங்க முடியாதவர்கள் அன்றாடம் இவ்வாறான ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாவதை இ.போ.ச.பஸ் மற்றும் தனியார் சிற்றூர்திகளில் அவதானிக்க முடிகின்றது.

பாடசாலைகளிலும் இது போன்ற செயற்பாடுகளே நடைபெறுகின்றன. குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கின்ற பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களுடன் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் நடந்து கொள்கின்ற முறையானது ஏற்றுக்கொள்ள முடியாதளவில் உள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

அரச மற்றும் தனியார் துறைகளை எடுத்துக்கொண்டால் அங்கு சேவை பெறச் செல்வோரில் படித்த அல்லது நாலுவிடயம் அறிந்தவர்களுக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கிறது. உடனடியாகவே அவர்கள் தமது கருமங்களை நிறைவேற்றிக்கொண்டு செல்கிறார்கள். ஆனால் ஏதுமறியாத மக்கள் நாள் முழுவதும் தவமிருந்து ஏற்றுக்கொள்ள முடியாத ஏச்சும் பேச்சும் வாங்கியே தமது சிறிய தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டியதாக உள்ளது.

பிரதேச மட்டங்களில் வசிக்கின்ற மக்களில் பலர் கல்வியறிவில் பின்தங்கியவர்களாக இருக்கிறார்களென்பது உண்மையான விடயமே.அது அந்த மக்களின் பிழை இல்லை.காலங்காலமாக அவ்வப் பிரதேசங்களையும் மாவட்டத்தையும் பொறுப்பேற்கின்ற அரச அதிகாரிகளிடம் கிராம மக்களை முன்னேற்ற வேண்டுமென்ற சிறந்த திட்டமிடல்கள் இல்லாமையாலேயே அவர்கள் தொடர்ந்தும் பின்தங்கியவர்களாக உள்ளனர்.

இந்நிலையில் அவர்களுக்கு உரிய சேவைகளை வழங்குவதை விட அவர்களைக் கண்டபடி திட்டுவதும் ஏசுவதும் எந்தளவு சரியானது என்பதை ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நேர்மையாகப் பணியாற்றுகின்ற எங்களை விமர்சித்து, எங்கள் மேல் சேறு பூசுவதா? என்று பல திணைக்களத் தலைவர்கள் 'துள்ளிக் குதிக்கக்கூடும்' ஆனால், மக்கள் பாதிக்கப்படுகின்ற ஒவ்வொரு சம்பவங்களையும் வெளிச்சத்துக்கு கொண்டுவரவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதலும் கருச்சிதைவுகளும்

காதல் தேடும் அப்பாவிப் பூக்கள் அனுபவம் மிக்க வண்டுகளின் பசிக்கு இரையாகி கருகி வீழ்கின்றன. இவ்வாறே நம் சமூகத்திலும் உரசிக் கொண்ட பாவத்திற்காய் உயிர்விடும் தீக்குச்சிகளாக காதல் என்ற சொல்லில் தொடங்கி தற்கொலைவரை நீழ்கின்ற துன்பியல் தொடர்கிறது.

தற்போது, பெரிதும் காதல் என்ற உருமறைப்பில் காமம் அரங்கேற்றப்படுவதே நிகழ்வாகிப் போய்விட்ட சூழலில் கருச்சிதைவுகளும் தற்கொலைகளும் சகஜம் என்று கூறும் நிலையை நோக்கி நகர்கின்றன.

கருச்சிதைவு மேற்கொள்வது சட்டப்படி தவிர்க்கப்பட்ட விடயமாகும். இதைவிட நாட்டின் சில பாகங்களில் கருக்கலைப்பு அல்லது கருச்சிதைவு உண்டுபண்ணும் மருந்து வகைகள் பெற முடியாத நிலையே காணப்படுகிறது. [யாழ். குடாநாடு உட்பட] எமது சூழலில் அண்மைக்கால மாற்றங்களின் பின் தொலைபேசிகளின் அதிகரித்த பயன்பாடு அத்துடன் மட்டுமல்லாது காணொளி வசதிகளும் இளம் வயதினரிடையே கவனக் கலைப்பான்களாகவே காணப்படுகின்றன.

இவ்வாறான வசதி தவறுகளின் மீதான ஈர்ப்பை அதிகரித்துள்ளது. என்றால் மிகையாகாது இவ்வயதினரை உணர்வு ரீதியாக பாதிப்புறச் செய்யும் விதத்தில் செல்போன்கள் உச்சக் கட்ட பங்களிப்பைச் செய்கின்றன. இணையத்தளங்கள் இவற்றோடு சின்னத்திரைகளும் தவறாது தவறுகளையே தினம் தோறும் காண்பிக்கின்றன. இவ்வாறு ஏற்படும் உணர்வு ரீதியான குழப்பம் காதல் என்ற உருவில் பரிணமிக்கின்றது. தற்காலத்தில் காதலில் உண்மைத் தன்மை என்பது மிகவும் அருகிப் போய் விட்ட விடயமாகவே உள்ளது. சுருக்கமாகக் கூறின் காதல் ஒன்றும் கடவுள் இல்லை. ஓமோன் செய்யும் கலகம் தானடா என்பதே நிஜமாகின்றது.

எமது சமூக அமைப்பின் அந்தஸ்து, பேதம், சீதனம் போன்றவற்றாலும் காதலினூடு வாழ்வை அமைத்துக் கொள்ள எத்தனிக்கும் யுவதிகள் வாழ்வு, காதல், வன்முறைகள் என்ற பக்கத்தில் திருப்பப்பட்டு சிதைவுறுகின்றது.

இவ்வாறே சமூக அந்தஸ்து சமூகத்தின் கோரமான பார்வையில் இளவயதுக் கர்ப்பம் வலுவாகவே மாட்டிக் கொள்கின்றது. இந்நிலையில் மேலும் தவறுகளை அனுசரிக்கும் விதமாக சில வசனம் கையாளப்படுகின்றது. மருந்து இருக்கு ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. என்ற நம்பிக்கை ஊட்டல் வாசகங்களை நம்பி தவறுக்கு ஆட்படுத்தப்படும் யுவதிகளுக்கு தெரிய வேண்டும். அம்மருந்துகள் நாட்டின் சில பகுதிகளில் விற்பனையில் இல்லை என்பதும் கருச்சிதைவு மேற்கொள்ளலில் ஏற்படும் உயிராபத்தும் கட்டாயம் தெரிய வேண்டியதே காலத்தின் தேவையாகும்.

கருச்சிதைவு என்றால் மிகவும் எளியது என்ற எண்ணத்தை முதலில் கைவிட வேண்டும். குற்றவியல் கருச்சிதைவு என்பதே அதிகமாக கருக்கலைப்பு என்ற பெயரில் சில சட்டவிரோதமான முறையில் இரகசியமாக நிறைவேறுகின்றது. இறுதியில் இவர்கள் உயிராபத்துடனும், உயிர் ஆபத்தை அண்மித்த நிலையிலும் அரச மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

குற்றவியல் கருச்சிதைவை மேற்கொள்ளும் போது தொற்று நீக்கல் என்னும் விடயம் பொதுவாக கவனிக்கப்படுவதில்லை என்றே கூற வேண்டும். இதனால் குற்றவியல் கருச்சிதைவுக்கு உள்ளான பெண் சில நாட்களில் குருதிப் பெருக்குடன் காய்ச்சல் ஏற்பட்டு குருதி முழுவதும் தொற்றுக்கு உள்ளாகி மரணமடைகின்றார்.

இது மட்டுமல்லாது சில குற்றவியல் கருச்சிதைவை மேற்கொள்பவர்கள் கம்பிகள், சில வகை மரக் குச்சிகள், [ஆமணக்கு] போன்றவற்றை பயன்படுத்துவதால் மரணம் என்பது உறுதியாகவே உள்ளது.

இவை இவ்வாறிருக்க மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சை கூடத்தில் சில சந்தர்ப்பங்களில் கருச்சிதைவுகள் மேற்கொள்வதற்கு சட்டத்தில் அனுமதி உண்டு. அவ்வாறான நிகழ்வில் D&E (Dilation and Evacuation) சிகிச்சை மேற்கொள்ளப்படும். இச்சிகிச்சையில் கருப்பையின் வாய் திறக்கப்பட்டு கருப்பையில் உள்ள சிசு உறிஞ்சி எடுக்கப்படும்.

இச்செயற்பாடு மயக்க மருந்தேற்றப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்படும். கருப்பை வாய் திறக்கப்படும் போது Vasovagal shock என்ற நரம்பு சார் அதிர்ச்சி ஏற்படுவதுண்டு. இந்த நரம்பு சார் அதிர்ச்சி ஏற்படின் உயிராபத்து ஏற்படும் சாத்தியங்கள் மிக மிக அதிகம். சத்திரசிகிச்சைக் கூடத்தில் மின்முறை அவனிப்பான்களின் உதவியுடன் இதன் பாதிப்பை தவிர்த்துக் கொள்ள முடியும்.

இங்கே தான் கவனிக்க வேண்டும். குற்றவியல் கருச்சிதைவு மேற்கொள்ளப்படும் போது மயக்க மருந்து பயன்படுவது மதுசாரத்தால் மயங்கிய நிலையிலேயே மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் Vasovagal shock வரும் வாய்ப்புகள் தராளமாகவே உண்டு.

இச்செயற்பாட்டை மேற்கொள்பவர் மயக்க மருந்தேற்றும் வைத்தியருக்கான குறைந்தபட்ச அறிவை கொண்டிருப்பரா என்ற கேள்விக்கு விடை காண முடியாது உள்ளது. இதனால் Vasovagal shock வரும் போது மரணம் சம்பவிக்கப்பட அதிக வாய்ப்புகள் உண்டு.

இதைவிட சிசுவின் பகுதிகள் (product of conception) முற்றாக அகற்றப்படாவிடின் கருப்பை சுருங்கி இயல்பான நிலைக்கு வராது கருப்பை சுருக்கும் போது குருதிக் குழாய்களின் வெளித்தோன்றல் குறைக்கப்படுகின்றது. இதனால் குருதியிழப்பு குறைகின்றது.


இவ்வாறல்லாமல் சிசுவின் பகுதிகள் கருப்பையில் எஞ்சுமாயின் குருதியிழப்புடன் இறப்பு ஏற்படும் என்பதே உறுதி.

இவ்வாறு குற்றவியல் கருச்சிதைவை மேற்கொள்ளும் போது பயன்படும் ஆயுதங்களால் தவறுதலாக கருப்பையின் சுற்றயலில் காணப்படும் நேர்குடல், சிறுநீர்ப்பை என்பன தாக்கமுறுவதும் இதனால் சில சமயங்களில் பிற்காலத்தில் சிறுநீர், மலம் போன்றன யோனிப்பாதை வழி வெளியேறவும் சந்தர்ப்பங்கள் உண்டு.

இவ்வாறான மிகை ஆபத்தை ஏற்படுத்தும் கருச்சிதைவு ஒரு விஷப்பரீட்சை என்றே கூற வேண்டும். மேலும் கருச்சிதைவு மேற்கொள்வதாலும் எதிர்பாராத கர்ப்பத்துக்கு ஆளாவதாலும் பாலியல் நோய்கள் உருவாகும் வாய்ப்புகள் அதிகம் என்றே கூறலாம்.

எனவே, கருச்சிதைவை உண்டு பண்ணும் அளவிற்கு அறிமுகமில்லாத காதல்களும், முகவரியில்லாத நட்பும் கண்டவுடன் காதல் நிலை மாற வேண்டும் காதல் என்பது புனிதமானது. அது வாழ்வுக்கு தேவையானது. காமத்தைமட்டும் உள்ளீடாகக் கொண்ட மேற்படி காதல்கள் காதல் அல்ல. அவை காதல் சிதைவுகளே. காதல் காமத்தை அடிப்படையாக கொண்டு அமைவதைவிட காதல் அன்பைக் கொண்டு கட்டி எழுப்பப்படின் வாழ்வின் பிற்காலங்களிலும் இனிமைகுன்றாது. காமத்தின் வாழ்வு ஏறக்குறைய பெண்களில் நாற்பத்தைந்து வயது வரை என்று தான் கூறவேண்டும்.

எனவே, காமத்தின் உணர்ச்சியூட்டலில் கர்ப்பம் வரை சென்று கருச்சிதைவால் உயிர் இழப்பதும் கருச்சிதைவு செய்ய முடியாத சூழ்நிலைகளில் தற்கொலை செய்வதும் என்று நகர்வதாயின் தொடர்ந்தும் காதல் சிதைவுகளையும் கருச்சிதைவுகளையுமே சந்திக்க நேரிடும்.




டாக்டர்
வெ.நாகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய சுவை...

# தாயார் அடைப்ப மகளிர் திறந்திட...

மீனாசுந்தர்

காதலும் வீரமும் களிநடம் புரியும் பழந்தமிழ் நூல் முத்தொள்ளாயிரம் சேரன், சோழன்,பாண்டியன் என்ற மூவேந்தர்களைப் பற்றிய தொள்ளாயிரம் வெண்பாக்களில் புகழ்ந்துபாடும் பாக்களின் தொகுப்பே இந்நூல் 2700 பாடல்களில் தற்சமயம் கிடைத்திருக்கும் பாடல்கள் 110 மட்டுமே. இந்நூலை இயற்றிய புலவர் பற்றிய குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

காதலை ஒரு புதிய பரிமாணத்தோடு காட்டும் அழகியல் உணர்வுகளை முகிழ்க்கும் பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. மகள் மீது தாய்கொண்ட உண்மையான அக்கறையின் வெளிப்பாட்டை மனத்திரையில் காட்சிப் படுத்துகிறது.

முத்தொள்ளாயிரம் பாடல்களில் சேரமரபினரைக்கோதை, குடநாடன்,வஞ்சிக்கோ என்றும் சோழ மரபினரை நீர்நாடன், கிள்ளி, காவிரிநீர் நாடன் வளன் என்றும் பாண்டிய மரபினரை மாறன், தென்னவன்,வழுதி, செழியன் என்றும் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

சேரமன்னனாகிய கோதை என்பவன் மலர் மாலையை அணிந்து வீதியில் பவனி வருகிறான். மாலையிலுள்ள மலர்களை ஆராய்ந்து வண்டுகள் மொய்க்கின்றன. இளமையின் வாசலில் அடியெடுத்து வைக்கும் அழகுப் பதுமைகள் ஓர் அழகிய காவலனைக் கண்டால் என்ன செய்வர்? இளங்கன்னியர் மனம் என்னாகும்? அழகுக் காவலன் கன்னியர் மனதைக் கவர்த்திழுத்து கொள்ளையிட்டு விடுவானே!இத்துன்பம் ஈன்றவன் அறியாததா?

குதிரை பூட்டியதேரில் விரைந்து செல்லும் அவனைக்காணவேண்டி இளம் பெண் ஒருத்தி வாசலுக்கு விரைகிறாள். அவனைக்கண்டால் தன்மகள் நிலை என்னாகும் என அஞ்சுகிறாள் அப்பெண்ணின் தாய். காதல் நோய்கொண்டு கன்னியவள் தவிப்பாளே!மன்னவனை நினைத்து மனதுக்குள் குமைவாளே!தானிருக்கும் உலகம் மறந்து பெருந்துன்பத் தீயில் கருகுவாளே! என்றஞ்சியபடி அத்தாய் வீட்டுக் கதவை இழுத்துப் பூட்டிவிடுகிறாள். ஆனால், மகள் என்ன செய்தாள் தெரியுமா? அன்னை அவ்விடம் விட்டு அகன்று சென்றதும் ஆவல் பொங்க மகள் கதவைத்திறக்கிறாள். மீண்டும் அங்கே வந்த அன்னை கதவை அடைக்கிறாள். மீண்டும் மகள் கதவைத் திறக்கிறாள். இவ்வாறு தாய் அடைப்பதும் மகள் திறப்பதுமாய் அக் கதவுபடும்பாடு சொல்லிமாளாது.அன்னையர் அடைக்க மகளிர் திறக்கவுமாய் அத்தெருவில் உள்ள வீட்டுக்கதவுகளின் குமிழ்கள் எல்லாம் தேய்ந்து போயின. அதாவது மகளின் காதல் பயிர் மனதில் செழித்து வளரவளர வீட்டுக்

கதவுக் குமிழ் தேய்ந்துகொண்டேயிருந்தது என்பதை உணர்த்துவதாய் பாடல் ஒன்று படைக்கப்பட்டுள்ளது அப்பாடல் வருமாறு

**'தாயார் அடைப்ப மகளிர் திறந்**
**திட**
**தேய்ந்திரிந்த குடுமி**
**ழவர் ஆய்மலர்**
**வண்டுலாவும்**
**கண்ணிவயமான்**
**தேர்க்கோதையை**
**கண்டுலா**
**வும் வீதிக்க**
**தவு'**
**(முத்தொள்**
**-பாடல் 10)**

எப்பொருளாயினும் அதிகம் பயன்படுத்தினால் தேய்ந்துபோவது இயற்கை. ஆனால், அன்னையர் அடைப்பதாகவும் மகள் திறப்பதாகவும் அதனால் கதவு தேய்வதாகவும் ஓர் அழகியல் கற்பனை நம்மை ரசனையின் உச்சத்துக் கொண்டு செல்கிறது. இப்பாடல் தாய் என்ற உன்னத உறவின் மேன்மையை, கடமையை மகள் மீது கொண்ட அக்கறையின் வழி அழகுற நிறுவி நிற்கிறது.

கிராமங்களில் இன்றைக்கும் மகளின் திருமணம் முடியும் வரை மகளின் வாழ்க்கை குறித்த கவலையும் நல்வரன் கண்டு நல்வாழ்வை ஏற்படுத்தித் தரும் அக்கறையும் அதுவரை மகளின் மனம் சஞ்சலப்படும் வகையில் ஏதும் நடந்துவிடக்கூடாதே என்கிற பொறுப்புணர்ச்சியும் பெற்றோரிடம் இருந்து வருவதைக் காணலாம்.

இந்தப் பொறுப்புணர்ச்சி ஓர் உளவியல் சார்ந்ததற் காப்பு நடவடிக்கையாகவே படுகிறது. மேலும், இருண்மையுடன் எழுதப்படும் புலவர்களின் எழுத்துகள் புரியவில்லை என்றும் எளிய சொற்களால் புரியும் வண்ணம் எழுதுகிறார்கள் கவிஞர்கள் என்பதையும் விளக்கும் வண்ணமாய் 'புலவர் அடைப்ப கவிஞர் திறப்பர்' என்னும் சொல்லாடல் இப்பாடலில் இருந்தே தோன்றியிருக்கக்கூடும் என்று நினைக்கத் தோன்றுகிறது.

# சிறுபஞ்சமூலத்தில் தேசத் தொண்டு

கா,காளிதாஸ்

தெய்வத் தொண்டைக் காட்டிலும் மேன்மைமிக்கது தேசத்தொண்டு, சிறுபஞ்சமூலம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் ஒன்று. இந்நூலின் ஆசிரியர் காரியாசான் என்பவர். சிறுபஞ்ச மூலம் என்பது கண்டங்கத்தரி சிறுவழுதுணை சிறு மல்லி,பெருமல்லி, நெருஞ்சி முதலிய ஐந்து பொருள்களின் கலவை என்பர்.

இம்மருந்துகள் மக்களின் உடல் நோயைப் போக்குவதுபோல் சிறுபஞ்சமூலம் என்ற இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் மக்கள் மனதைச் சுத்தம் செய்யக்கூடிய ஐந்து உறுதிப்பொருள்கள் கொண்ட கருத்துகள் இருக்கும்.

**'வார் சான்ற கூந்தல்! வரம்பு உயர**
**வைகலும்**
**நீர்சான்று உயரவே நெல் உய**
**ரும்-சீர்சான்ற**
**தாவாக் குடி உயரத் தாங்கரும் சீர்க்**
**கோ உயரும்**
**ஓவாது உரைக்கும் உலகு'**

இப்பாடலின் கருத்து;நீண்ட கூந்தலை உடைய பெண்ணே! நிலத்திலே நீர் தங்கும் படியாகக் கரை உயர்ந்திருக்கவேண்டும். கரை உயர்ந்து காணப்பட்டால் தான் குளத்திலே நீர் தேங்கி இருக்கும். நிலத்தடி நீர் குறையாது.தண்ணீர் தேங்கி இருந்தால் தான் வேளாண்மைப் பயிர் செய்ய முடியும்.நெற்பயிர் ஓங்கி செழித்து வளர்ந்தால் தான் குடிமக்கள் யாவரும் பஞ்சம் பசியின்றி பல செல்வங்கள் பெற்றுச் செழுமையுடன் வாழ்வார்கள். நாட்டின் குடிமக்கள் சிறந்து வாழ்ந்தால் தான் அந்நாட்டு மன்னனும் உயர்வாக மதிக்கப்படுவான்.அவனது அரசாட்சியும் சிறந்து விளங்கும் என்பதாகும்.

தரிசு நிலங்களைத் திருத்தி கழனிகளாக்கி நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கினால் தான் அந்நாட்டில் பஞ்சம் என்பதே இருக்காது.மக்கள் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வார்கள்.

அதனால், காடுகளை அழித்துவிடக்கூடாது அவற்றைப்பாதுகாக்கவேண்டும். புதிய மரங்களை வளர்க்க வேண்டும் என்று நமது பழந்தமிழ் இலக்கியங்களிலே சொல்லப்பட்டுள்ளது.குழந்தை பிறந்ததும் அக் குழந்தையின் நினைவாக ஒரு மரம் நடுவது நமது தமிழ் நாட்டின் மரபாகவே இருந்து வருகிறது.

தலைவனோடு உரையாடும் தலைவி அருகில் புன்னைமரம் இருப்பது கண்டு நாணப் பட்டாள்.தலைவன் அவளை ஏன் நாணம் கொண்டாய் என்று கேட்க அம்மரமோ எனக்குச் சகோதரி முறை வேண்டும் என்கிறாள். திருமண நாளில் உதிமரம் நட்டு வளர்ப்பதும் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்நாளில் ஐந்து பால்தரும் மரங்களை நட்டுப் பயிர் செய்யவேண்டும் என்பதும் நம் தமிழரின் தலையாய கடமையாக இருந்து வருகிறது.

புலவர் காரியாசான்,நாடு நன்றாக வாழ நாட்டிலே நீர் வளம் குறையாது உணவு உற்பத்தி பெருக, மக்கள் மகிழ்வோடும் ஒற்றுமையோடும் வாழ நல்ல கருத்துகளை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாடியிருப்பது போற்றத்தக்கதாகும்.

**'குளம் தொட்டுக் கோடு பதிந்து**
**வழிசீத்து**
**உளம்தொட்டு உழுவயல்**
**ஆக்கி-வளம் தொட்டுப்**
**பாகுபடும் கிணற்றோடு என்று**
**இவ் ஐம்பால் படுத்தான்**
**ஏகும் சுவர்க்கத்து**
**இனிது'(பா-66)**

நாட்டில் தண்ணீர் தட்டுப்பாடில்லாமல் இருக்க பெரிய குளத்தைத் தோண்ட வேண்டும். (நீர்ப்பாசனம்) தளிர்விட்டு வளரக்கூடிய மரக்கிளைகளை நட்டுத் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும்.(பசுமைப்புரட்சி) மக்கள் நடக்க முள், முடல் இல்லாத பாதைகளை மேடுபள்ளங்கள் இல்லாமல் செப்பனிட்டு வைக்கவேண்டும்.(சாலை வசதி) தரிசு நிலங்களைப் பக்குவப்படுத்தி விளை நிலங்களாக மாற்றவேண்டும். (தரிசு நில மேம்பாடு) சுற்றிலும் கரை கட்டப்பட்டுள்ள கிணறுகளை வெட்ட வேண்டும்.(குடிநீர் வசதி) இந்த ஐந்து அறப்பணிகளையும் தேசத்திற்காக எவன் செய்கிறானோ அவன் சொர்க்கம் சென்றடைவான் என்கிறது சிறுபஞ்சமூலப் பாடல்.

சிறுபஞ்சமூலம் கூறும் இக்கருத்துகள் இந்நாளில் நாம் பின்பற்ற வேண்டிய கருத்துகள் தானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த செலவில் ஆடம்பரக் கார்



உலகிலேயே விலை உயர்ந்த கார்களில் ஒன்று, 'லம்பார்க்கினி'. எல்லோருக்குமே அது போன்ற ஆடம்பரக் கார்களில் ஆர்வம் இருக்கும். ஆனால் சீனாவைச் சேர்ந்த ஒரு லொறி சாரதி துணிந்து அந்தக் கனவை நனவாக்கிக் கொண்டுள்ளார். பின்லோ வுவைச் சேர்ந்த சென் ஜின்மியாவோ என்ற அந்த இளம் சாரதிக்கு வயது 25. அவர் தயாரித்திருக்கும் லம்பாக்கினி ஸ்போர்ட்ஸ் காருக்கான செலவு ஒன்றே முக்கால் லட்ச ரூபாதான். தான் எப்படி இந்த காரை தயாரித்தேன் என்று சென்னே கூறுகிறார். ''முதலில் நான் இன்டர்நெட் டிலிருந்து லம்பார்க்கினி கார் படங்களை 'டவுன்லோடு' செய்தேன். பின்னர் அதற் கேற்றவாறு பொருட்களைச் சந்தையில் வாங்கி காரை உருவாக்கினேன்''.

ஆரம்பக் கல்வி மட்டுமே படித்திருக் கும் சென்னுக்கு நீண்டகாலமாகவே லம் பாக்கினி கனவு . சொந்த வீட்டார் இந்த விடயத்தில் சென்னை ஊக்கப்படுத் தவில்லை என்றாலும், தனது சேமிப்பை எல்லாம் திரட்டி தன்னுடைய கனவு காரை உருவாக்கி விட் டார் சென். சிறகு போல மேலே விரியும் கதவுகள் உட்பட அப்படியே அசல் லம்பார்க்கினி போல இருக்கிறது சென்னின் 'டூப்ளிகேட்'. ஆனால் இது அதிகப்பட்சமாக 50 மைல் வேகத்தில்தான் செல்லும். நிஜலம்பார்க்கினியோ 200 மைல் வேகத்தில் சீறும்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 33

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | ✽ | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | ✽ | 9 | 10 |
| 11 | ✽ | 12 | 13 | 14 | ✽ |
| ✽ | 15 | ✽ | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | ✽ | 23 |
| 24 | 25 | 26 | ✽ | 27 | 28 |

**இடமிருந்து வலம்**

1. உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெறவுள்ள இடம்
3. இதில் குளிப்பது சுகமானது
6. முன்னாள் கதாநாயகி - விபசாரத்தில் சிக்கியவர் (குழம்பியுள்ளது)
9. கணவன்
12. சில சிப்பிக்குள் இருப்பது (குழம்பியுள்ளது)
16. இதை திட்டாமல் புத்தியை திட்டவேண்டும் என்பர் (குழம்பியுள்ளது)
19. மந்தி என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
24. பிரிவு
27. இது சிலவேளைகளில் தொற்றும் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. பாண் தயாரிக்கப் பயன்படுவது
2. எதிரி
4. துணி வகையொன்று (குழம்பியுள்ளது)
5. ஒவ்வொருவரினதும் வாழ்க்கையையும் இதுவே தீர்மானிக்கும் என்பர்
8. பெண்
13. பாக்கு மரத்தை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)
15. வெப்பத்துக்கு சிறந்த பனையிலிருந்து கிடைப்பது
18. இதனால் குடும்பத்துக்குள் பிரச்சினை வருவதுண்டு (குழம்பியுள்ளது)
19. பிரி என்றும் சொல்லலாம் (தலைகீழ்)
21. மன்மதனின் மனைவி

### குறுக்கெழுத்துப்போட்டி - 31 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. இறப்பு | 1. இறைவன் |
| 6. கறை | 2. நகர் |
| 8. அடகு | 4. புடம் |
| 11. வர்ணம் | 5. அரவம் |
| 18. வலை | 13. மணம் |
| 20. கம்பம் | 18. அபலை |
| 24. தோணி | 20. கனி |
| 26. ஆணை | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**ஞா.துவாரகா,**
மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு,
கைதடி - 02.

### பாராட்டுப்பெறுவோர்

01. நிஷா அழககம்,
யாழ். வீதி, மந்திகை.

02. எஸ்.எஸ்.பவானந்தன்,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

03. வி.விஜயந்தி,
இல.31/2, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

04. சி.நிரோஜன்,
மாவிசந்தை,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

05. கு.ஆரபி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 64, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................




## தெரிந்துகொள்ளுங்கள்!

* சாரதி இல்லாத தானியங்கி சுரங்கப் பாதை ரயில் சிங்கப்பூரில் ஓடுகிறது.
* எவரெஸ்ட் சிகரத்தை திபெத்தியர் தாய்த் தேவதை (சோமாலுங்மா) என்றே அழைக்கின்றனர்.
* தேவாரம் பாடப் பெற்ற திருத்தலங்கள் மொத்தம் 274.
* இந்தியாவில் ஜனாதிபதி பதவிக்கு வரும் முன்பே பாரத ரத்னா விருது பெற்றவர்கள் முன்னாள் ஜனாதி பதிகளான டாக்டர் ஜாகீர் உசேன், ஏ.பி.ஜே.அப்துல்க லாம் ஆகியோர்.
* அடுத்தடுத்து இரு ஆண்டுகளில் இரண்டுமுறை எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் வீராங்கனை சந் தோஷ்யாதவ்.
* 'கிராண்ட் மாஸ்டர்' பட்டத்தைச் சதுரங்கப் போட்டி யில் வென்ற முதல் இந்தியர் விசுவநாதன் ஆனந்.

## பதிலளியுங்கள்...

1. வாயில் ஈரப்பதம் குறையாமல் பாதுகாப்பது எது?
2. வெளவால்கள் இருட்டில் பறக்க எதை பயன் படுத்துகிறது?
3. அமில மழை பெய்ய காரணமாகும் வாயு எது?
4. விளக்குத் திரியில் எண்ணெய் ஏறுவது எவ் வாறு அழைக்கப்படுகிறது?
5. வெப்பமானிகளில் பயன்படும் உலோகம் எது?
6. மணலின் வேதியியல் பெயர் என்ன?
7. கல்சியம் ஹைட்ராக்சைடு எதனுடைய வேதிப்பெயர்?
8. சமையல் வாயுவில் அதிகம் உள்ளது?
9. தமிழகத்தில் அதிகம் கிடைக்கும் கனிமம் எது?
10. எரிமலையிலிருந்து வெளிவரும் குழம்பு?
11. மனித உடலில் அதிகம் காணப்படும் உலோ கம் எது?
12. நம் பற்களிலும், எலும்புகளிலும் உள்ள வேதிப் பொருள் என்ன?
13. நீரில் கரையும் விற்றமின் எது?
14. பருப்பு வகைகளில் எந்தச் சத்து அதிகம் உள்ளது?
15. நமது எலும்புகளில் எத்தனை சதவீதம் நீர் உள்ளது?

1. உமிழ்நீர் சுரப்பிகள்
2. அல்ட்ராசோனிக் அலைகள்
3. கார்பன் டை ஒக்சைட்
4. பரப்பு இழுவிசை
5. பாதரசம்
6. சிலிக்கன் டை ஒக் சைட்
7. சுண்ணாம்பு
8. பியூட்டேன்
9. லிக்னைட்
10. லாவா
11. கல்சியம்
12. கல்சியம் பொஸ்பேட்
13. விற்றமின் சி
14. புரதம்
15. 22 சதவீதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருத்துவத்துறையின் புதிய முகம்

ஸ்பெயினில் உலகிலேயே முழுமையான முதல் முகமாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக ஒரு நபருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெவ்வேறு நபர்களின் முக திசுக்கள் தோல், மூக்கு, உதடு, கன்னம் ஆகியவற்றை தானம் பெற்று,இந்த நபருக்கு பொருந்தி சாதனை படைத்துள்ளனர்.ஸ்பெயின் டாக்டர்கள் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை பற்றி நாம் அதிகமாகவே கேள்விப்பட்டுள்ளோம். குறிப்பாக திரையுலகில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்து கொள்வோர் அதிகம். முகத்தில் உள்ள மூக்கு உள்ளிட்ட ஏதாவது உறுப்பின் அமைப்பு, தங்களுக்கு பிடிக்கவில்லை எனில் நடிகைகள் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்து அவற்றின் அமைப்பை சரிசெய்து கொள்வது வழக்கம். விபத்தில் அல்லது பேராபத்தில் சிக்கி, முகம் சிதைந்து போனால், முகமே விகாரமாகி விடும். விகாரத்தை மறைத்து மீண்டும் முழுத் தோலுடன் முகத்தை மீட்பதற்கென முக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. பிரான்ஸ் நாட்டில் தான் இந்த முகமாற்று அறுவை சிகிச்சைக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது.

கடந்த 2005 இல் பிரான்ஸைச் சேர்ந்த இசபெல்லா (வயது 38)என்ற பெண் அவருடைய செல்ல நாய்க் குட்டியை அளவுக்கு அதிகமாக கொஞ்சியதாலோ என்னவோ அந்த நாய் அவருடைய முகத்தை கடித்துக் குதறி ஒரு வழியாக்கிவிட்டது.முகத்தின் ஒரு பக்கம் விகாரமாகி விட்டது.சிதைந்து போன பகுதியைச் சீராக்க அவருக்கு முக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. இதற்கு பின் சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இந்த அறுவை சிகிச்சைகள் நடந்தன.

தற்போது, ஸ்பெயின் நாட்டை சேர்ந்த ஒருவருக்கு முழு முகத்தையும் மாற்றி அமைக்கும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.அறுவை சிகிச்சை செய்து கொண்டவரின் பெயர், மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. இவர் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு விபத்தில் சிக்கிவிட்டார். அவரது முகத்தில் பலமாக அடிபட்டது. முகத்தின் அமைப்பு முழுவதுமாக மாறி விட்டது. வாய் கோணலாகி வித்தியாசமாக காட்சி அளித்தது. பற்களையும் காணவில்லை. மூக்கு இருந்ததற்கான அடையாளமே தெரியவில்லை. அந்த இடத்தில் ஒரு சிறிய துளை மட்டுமே இருந்தது.அதன் பின் அவரால் மூச்சு விட முடியவில்லை. உணவு உண்ண முடியவில்லை. பேச முடியவில்லை. இதையடுத்து டாக்டர்களை அணுகிய இந்நபர் சிறிய அளவிலான முகமாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டார். பெரிய அளவில் பயன்கிடைக்கவில்லை.

இதைத் தொடர்ந்து அங்குள்ள வோல் டி ஹெப்ரோன் என்ற மருத்துவமனையில் சேர்ந்தார். அங்கு அவருக்கு சமீபத்தில் முகமாற்று அறுவை சிகிச்சை நடந்தது.30 பேர் அடங்கிய மருத்துவக் குழுவினர் தொடர்ந்து 22 மணி நேரம் போராடி அவரது முகத்தில் அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.அடையாளம் காட்டப்படாத ஒரு நபரிடமிருந்து தானம் பெற்ற முகத் திசுக்கள்,மூக்கு, தாடை, பற்கள், கன்னத்தில் உள்ள எலும்புகள், தோல் ஆகியவை இவருக்கு பொருத்தப்பட்டன் பற்கள்,கன்ன எலும்புகள் ஆகியவற்றை தாங்கி நிற்பதற்காக சிறிய உலோகத் தகடுகளும் அவரது முகத்தில் பொருத்தப் பட்டன. அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டபோது உறுப்புகளை தான் கொடுத்தவரின் முகம் போல் இவருக்கு அமைந்து விடக்கூடாது என்பதில் டாக்டர்கள் கவனமாக இருந்தனர். அறுவை சிகிச்சை முடிந்து ஒரு வாரம் அவர் ஓய்வில் இருந்தார்.பின் டாக்டர்கள் கண்ணாடியில் அவரது முகத்தை காட்டினர். அதில் தனது புதிய முகத்தை பார்த்த அந்த நபர் மகிழ்ச்சியும் திருப்தியும் தெரிவித்தார்.

அறுவை சிகிச்சை செய்து கொண்டவரின் உறவினர் ஒருவர் கூறுகையில்; அறுவை சிகிச்சைக்கு முன் அவரது நெற்றி, கழுத்து ஆகிய இடங்களில் பெரிய தழும்புகள் இருந்தன. தற்போது அதற்கான தடயமே இல்லை என்றார். ஸ்பெயினில் நடந்துள்ள இந்த முழுமையான முதல் முகமாற்று அறுவை சிகிச்சை மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் ஒரு மைல் கல்லாக கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

150510-1.indd 11
Process Cyan

# வருகிறது விஜயின் வேலாயுதம்



விஜய் நடிக்கும் 52 ஆவது படத்துக்கு வேலாயுதம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தப் படத்தை ஜெயம்ராஜா இயக்குகிறார். சுறா படத்தையடுத்து, மலையாளப் படமான பொடிகார்ட்டு ரீமேக்கில் நடித்து வருகிறார் விஜய். இந்தப் படத்தின் பெயர் காவல்காரன். தலைப்பை வைத்த பிறகுதான் படப்பிடிப்புக்குச் செல்வது ஜெயம்ராஜாவின் வழக்கம். எனவே, விஜயின் இந்தப் படத்துக்கு வேலாயுதம் என்ற பெயரைச் சூட்டியுள்ளனர். விஜய் முன்பு வைக்கப்பட்ட நான்கைந்து தலைப்புகளில், அவரே விரும்பித் தேர்வு செய்த தலைப்பாம் இது. இசையமைப்பாளராக தேவிஸ்ரீபிரசாத் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் படத்தின் நடிகர்கள், இதர தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்து விரைவில் அறிவிப்பு வெளியாக உள்ளது. ஜூலை மாதம் வேலாயுதம் படப்பிடிப்பு துவங்குகிறது.

## நான் படம் இயக்குகிறேனா...?



நான் இப்போதைக்கு எந்தப் படத்தையும் இயக்குவதாக இல்லை. யாரோ சிலர் தவறான செய்திகளைத் தந்துள்ளனர் என்கிறார் நடிகர் தனுஷ். உத்தமபுத்திரன், ஆடுகளம், மாப்பிள்ளை ஆகிய படங்களில் நடித்து வருகிறார் நடிகர் தனுஷ். இதற்கிடையே, ஒரு குறும்படத்தையும், அதைத் தொடர்ந்து முழு நீள திரைப்படம் ஒன்றையும் தனுஷ் இயக்கப்போவதாக செய்திகள் வந்தன. நடிகை குத்து ரம்யா மற்றும் மனைவி ஐஸ்வர்யாவுடன் இணைந்து இந்தப் படங்களை அவர் இயக்குவார் என்றெல்லாம் செய்திகள் வந்தன. இதுபற்றி தனுஷ் கூறுகையில்; 'எப்படித்தான் இந்த மாதிரி கற்பனையா எழுதுறாங்களோ தெரியல. நான் சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தை என்னிடம் சின்ன விளக்கம் கூட கேட்காமல் வெளியிடுவது என்ன நியாயம்? நான் என் குடும்பத்தோடு இருக்கும்போது வீடியோ எடுப்பேன் அவ்வளவுதான். மத்தபடி சினிமா இயக்குகிற ஐடியாவே இல்லை. அதுவும் யாருடனும் இணைந்து இயக்கிற ஆள் நானில்லை. இப்போது நான் மூன்று படங்களில் நடித்து வருகிறேன். யோசிக்கக் கூட நேரமில்லாத அவளவுக்கு பிஸி...' என்றார்.

# Saturday சினிமா



## சாந்தனுவுடன் மோதும் கமல்

ஹோசிமின் இயக்கும் ஆயிரம் விளக்கு படத்தில் கமல் என்ற புதுமுகத்தை அறிமுகப்படுத்துகிறார்கள். ஏற்கனவே கமல் என்ற பெயரில் ஒரு மலையாள இயக்குநர் இருக்கிறார். நடிகர் கமலுக்கும் இவருக்குமான பெயர் குழப்பமே ரசிகர்களுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இதில் இன்னொரு கமலும் வந்தால்...? இந்தக் கமல் தெலுங்குப் படங்களில் நடித்து வருகிறவர். ஆயிரம் விளக்கு படத்தில் சாந்தனுவுடன் மோதும் வில்லனாக அறிமுகமாகிறார். தாதா கதையான இதில் தாதா சத்யராஜை திருத்தும் வேடம் சாந்தனுவுக்கு அப்படியே கமல் என்ற வில்லனின் பெயரையும் திருத்தினால் புண்ணியமாகப் போகும்.

பல வருடங்கள் கழித்து தனது பிறந்த நாளை குடும்பத்துடன் கொண்டாடியிருக்கிறார் நமீதா. சூரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரமாண்ட குடும்ப விழாவில் கேக் வெட்டி அப்பா அம்மாவுக்கு ஊட்டிய நமீதா, தமிழ்நாட்டில் ரசிகர்களுடன் இந்த நாளை கொண்டாடவில்லையே என்றும் வருந்தினாராம்.



தமன்னாவின் கோதுமை நிறம் எனக்கு ரொம்ப பிடிக்கும் என்று கூறியிருக்கிறார் த்ரிஷா. நேரம் கிடைத்தால் இருவரும் சந்தித்து அரட்டை அடித்துக் கொள்கிற அளவுக்கு பிரண்ட்ஸ்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திக்கு பெண் தேடும் சிவகுமார்



நடிகர் கார்த்தியின் நண்பர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் என ஆளாளுக்கு கார்த்தி தமன்னா ஜோடிப் பொருத்தம் பற்றி கொளுத்திப் போட, கவலையில் இருக்கிறார் நடிகர் சிவகுமார். பிள்ளைகள் சும்மா இருந்தாலும் எழுதவெச்சே.. சேர்த்து வெச்சுடுவாங்க என நினைத்தவர் கார்த்திக்கு திருமணம் செய்ய முடிவெடுத்துவிட்டார். சூர்யா காதலித்து திருமணம் செய்து கொண்டதுபோல் கார்த்தியும் காதல் வலையில் வீழ்ந்துவிடக் கூடாது என்பதால் கோவையில் தனது சொந்தங்களில் பெண் தேடி வருகிறார். அதிலும் தனது அந்தஸ்துக்கு ஏற்ற மாதிரியான பெண்ணாகவும் பார்க்கிறார். அதனால் அடிக்கடி கோவை சென்று வரும் சிவகுமார், நகைக் கடை அதிபர் மகள், அரசியல் புள்ளியின் மகள் என சில சம்பந்தங்கள் வந்திருப்பதாகக் கூறுகிறார்.

எனக்கும் த்ரிஷாவுக்கும் பேச்சு வார்த்தையில்லை என்று பத்திரிகைகளில் வருகிற செய்தியை படித்துவிட்டு நாங்க ரெண்டு பேருமே சிரிச்சிருக்கோம். எங்களுக்குள்ளே அப்படி ஒரு பொறாமையும் இல்லை என்கிறார் நயன்தாரா!



மம்பட்டியான்
பிரசாந்-பிரகாஷ்ராஜ்

# தமிழுக்கு வரும் பார்வதி



மிஸ் வேர்ள்ட் 2008 இல் இரண்டாவது இடத்தைப் பிடித்தவர் மலையாளியான பார்வதி ஓமனக்குட்டன். தனது முன்னோடிகள் சுஷ்மிதா சென்,ஐஸ்வர்யாராய், லாரா தத்தா வரிசையில் பார்வதியும் கலைச்சேவைக்கு வந்துள்ளார். விரைவில் தமிழ்ப் படம் ஒன்றிலும் இவர் நடிக்கவுள்ளார். பரதநாட்டியத்தை மையமாகக் கொண்ட இந்தப் படத்தை நிதின் ராமகிருஷ்ணன் என்பவர் இயக்குகிறார். இவர் தனது 17 ஆவது வயதில் மலையாளத்தில் படம் இயக்கியவர். பிரகாஷ் ராஜ், கலாபவன மணி ஆகியோரும் இதில் நடிக்கிறார்கள். சந்தோஷ் இசையமைக்க மது அம்பாட் ஒளிப்பதிவு செய்கிறார் பார்வதி ஓமனக்குட்டனுடன் விமலா ராமனும் முக்கியமான வேடம் ஒன்றில் நடிக்கிறார்.

# ஓடி வந்த இயக்குநர்

வெண்ணிலா கபடிக்குழு படத்தில் வரும் சூரியை நினைவிருக்கிறதா? ஐம்பது பரோட்டாவை அப்படியே சாப்பிடுகிறவர்? சமீபத்தில் அவரை ஒப்பந்தம் செய்ய சென்ற இயக்குநர் அலறியடித்து ஓடி வந்திருக்கிறார். காரணம் சூரி கேட்ட தொகை வெண்ணிலா கபடிக்குழுவுக்குப் பிறகு சூரியின் முகமும், பெயரும் தெரியிறமாதிரி ஒரு படமும் வரவில்லை. நான்கைந்து படங்களில் நடித்துக் கொண்டிருப்பது உண்மை. இந்நிலையில் தனது படத்தில் நடிப்பதற்காக சூரியை கேட்டிருக்கிறார் ஒரு அறிமுக இயக்குனர் அவரிடம் சம்பளமாக சூரி கேட்டது பதினைந்து லட்சங்கள். திணறிப்போன இயக்குனர். எனக்கு வாரக்கணக்கில் எல்லாம் கால்ஷீட் வேண்டாம். நாட்கணக்கில் போதும் என்றிருக்கிறார். அப்படியா? நாள் கணக்கு என்றால் ஒரு நாளைக்கு எழுபத்தைந்தாயிரம் கொடுத்திடுங்க என்று கேட்க துண்டை காணோம் துவைச்சுப் போட்ட துணியை காணோம்னு ஓடி வந்திருக்கிறார் இயக்குநர்.

# விஜயின் மகனுக்கு அழைப்பு



குழந்தைகளை வைத்து எடுத்தால் கொஞ்சமாவது படம் ஓடும் என்று நம்புகிறார்கள் பட அதிபர்கள். சுழி அடுத்து குழந்தைப் படங்கள் மீது காற்று வீசத் தொடங்கியிருக்கிறது. அதற்காக குழந்தைகளைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள் இயக்குநர்கள். அதிலும் நாயகன் வீட்டுக் குழந்தைகள் என்றால் மிகப்பெரிய விளம்பரமாக இருக்கும். அப்படி நடிகர் விஜய் மகன் சஞ்சயை நடிக்க வைக்க பிரபலமான நிறுவனங்கள் கேட்டிருக்கிறார்கள். கேட்டவர்களிடத்தில் எல்லாம் பையன் முதல்ல படிக்கட்டுங் கண்ணா, இப்ப என்னங் கண்ணா அவசரம்? படிக்கிற வயசுல படிக்கணும், நடிக்கிற வயசுல நடிக்கணும் என்று பஞ்ச் டயலாக் பேசி அனுப்பி விட்டாராம்.



தில்லாலங்கடி
ஜெயம் ரவி-தமன்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் இல்லங்களின் இன்றைய நிலை

‘உலகின் ஒப்பற்ற செல்வங்கள் சிறுவர்கள்’’ என்றார் ஜவஹர்லால் நேரு! ஆனால் இச் செல்வங்கள் வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்களோ பலநூறு! இன்று போர் ஓய்ந்து சமாதானச் சூழல் நிலவினாலும் சிறுவர் பிரச்சினைகள் ஓய்ந்தபடியில்லை. மாறாகச் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இத்தகு சிறார்களில் சிறுவர் இல்லங்களில் தங்கிக் கல்வி கற்கின்றவர்கள் ஒரு சில நலன்களைப் பெற்ற போதிலும் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

பிறவிகளிலே மனிதப்பிறவி அரிதானது! அதிலும் பிள்ளைப் பருவமோ மகத்தானதும் மகிழ்ச்சியானதுமாகும். அந்தரீதியில் இப்பிள்ளைகள் குடும்பச்சூழலில் வளர்க்கப்படுதலே மிகவும் சிறப்பான தொன்றாக அமையினும் பல்வேறு காரணங்களால் இவர்கள் சிறுவர் இல்லங்களில் தங்கிக்கற்பதற்காக நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பெற்றோரை இழந்தோர், பெற்றோரால் கைவிடப்பட்டோர்,ஒவ்வாத குடும்பச் சூழல் மற்றும் வறுமைநிலை முதலான காரணங்களே இவர்களைச் சிறுவர் இல்லங்களை நாட வைக்கின்றன. இன்னும் சில பெற்றோர்கள், தம் பிள்ளைகள் நற்பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து கல்வியில் உயர வேண்டும் எனும் உயரிய நோக்கில் சிறுவர் இல்லங்களிலோ, பாடசாலை விடுதிகளிலோ தங்கியிருந்து கற்பதற்காகத் தம் பிள்ளைகளை இணைக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை 38 சிறுவர் இல்லங்கள் இயங்கி வருவதாக மாவட்டச் செயலகத்தின் 2008 ஆம் ஆண்டுப் புள்ளிவிபர அறிக்கை மூலம் அறிய முடிகின்றது. தற்போது நடைபெற்று முடிந்துள்ள வன்னியுத்தத்தினால் அநாதரவாக்கப்பட்ட சிறார்களும் இவ்வில்லங்களிற் தங்கிக் கற்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. பல்வேறு நிலைகளிலும் நொந்து போயுள்ள இச்சிறார்களை ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகள் மந்தகதியிலே இயங்கிவருவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

பல்வேறுபட்ட காரணங்களினால் குடும்பச் சூழலினின்றும் பிரிக்கப்பட்ட பிள்ளைகள் இத்தகு இல்லங்களிற் தங்கியிருந்து அனுபவித்துவரும் இன்னல்களை யாரும் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. பெரும்பாலான சிறுவர் இல்லங்கள் மற்றும் பாடசாலை விடுதிகளில் இவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவுகளில் போஷணைத்தன்மைகள் குறைவாக உள்ள அதே நேரம் அவை சுத்தம் மற்றும் சுவையற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சில உணவுகள் உரிய வகையில் வேகவைக்கப்படாது பரிமாறப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

சிறுவர் இல்லமொன்றில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவி ஒருவரிடம் அவரது நலன் தொடர்பாக வினவிய வேளை, எங்கள் இல்லப்பொறுப்பதிகாரி ரொம்பவும் கோபப்படுவார். ஒரு நேரம் அவர் ஒரு மாதிரி இருப்பார். எந்த நேரமும் எங்களை ஏசியபடியேயிருப்பார். விளையாடக் கூட அனுமதிக்க மாட்டார். நாம் செய்கின்ற வேலையிலும் குற்றங் கண்டுபிடித்துக் கேலி செய்வார். இதனால் இங்கிருந்து படிக்கவே எனக்கு விருப்பமில்லை என்றார். மற்றொரு மாணவியிடம் அணுகிய வேளை, அவர் தேநீர் குடித்தவண்ணம் பதிலிறுத்தார். என்ன தேநீரா குடிக்கிறீங்க? எனக் கேட்டபோது; ‘ஆம்! எப்போதுமே இங்கு தேநீர் தான் தருவாங்க ஏதாவது விஷேசம் என்றால் மட்டும் தான் பால் தேநீர் கிடைக்கும்.இங்கு வழங்கப்படுகின்ற உணவுகளும் எங்களுக்குப் போதுமானவையாக இருப்பதில்லை. ஒவ்வொருநாளும் காலையில் 2 சீவல் பாண் தான் தருவார்கள்’ என வெறுப்புடன் கூறினார்.

பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அவர்களின் சிந்தனாசக்தியை அதிகரிப்பதற்காகச் சிறந்த நிறையுணவுகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் சிறுவர் இல்லங்களைப் பொறுத்தவரை பெரும்பாலான சிறுவர் இல்லங்களில் இவை கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. இதற்கான காரணத்தை வினவின் ‘நிதிப்பற்றாக் குறை’ நிலவுவதாகக் கூறுவார்கள். ஆனால் காசேதும் இல்லாது கிடைக்கின்ற ‘அன்பை’க் கூட அநேக இல்லங்களில் எதிர்பார்க்க முடிவதில்லை.

பிள்ளையின் ‘உயரிய நலன்’ கருதி இல்லங்களில் இணைக்கப்படுகின்றவர்கள் உண்மையில் உயரிய நலன்களை அடைகின்றார்களா எனின் ‘இல்லை’ என்பதுவே தெளிவான உண்மை! இவர்கள் ‘தனிமையுணர்வினால் உந்தப்பட்டு’ பல்வேறு ‘உளநெருக்கீடுகளையும்’ சந்திக்கின்றனர். இங்குள்ள பிள்ளைகள் பாசத்திற்காக ஏங்குதல், வேலைப்பளுவினால் சோர்வடைதல், மகிழ்ச்சியான சூழலின்மையால் வாட்டமடைதல், நிறையுணவின்மையால் மூளை வளர்ச்சி குன்றிப்போதல், தனிமையுணர்வினால் வாழ்க்கையிற் பிடிப்பின்றியிருத்தல் மற்றும் எதிர்பார்க்கும் தேவைகள் நிறைவேறாமையால் துன்பத்தை வளர்த்தல் முதலிய நிலைகளிற் காணப்படுவதைப் புரிந்து கொள்ளலாம்.

இன்றைய சிறுவர் இல்லங்களின் இல்லப்பொறுப்பாளர்கள் சிறுவர்களைக் கையாளும் விதம் தொடர்பான விமர்சனங்கள் எழுந்தவண்ணம் உள்ளன. ஆதலால் சிறுவர்நலனில் அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பினரும் அவர்களின் தேவைகளை இனங்கண்டு– அவர்களை நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்குவது இன்றைய தேவையாக உள்ளது!

எஸ்.ரூபனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...



# டேவிட் கமரூன்

பிரிட்டனின் தேர்தல் நடைபெற்று ஆட்சி அமைப்பது குறித்துப் பிரதான கட்சிகளிடையே இருந்து வந்த இழுபறிநிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் பிரிட்டனின் புதிய பிரதமராக கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரான டேவிட் கமரூன் பதவியேற்றுள்ளார்.

13 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்தை தம்வசம் வைத்திருந்த தொழிலாளர் கட்சி நடைபெற்று முடிந்த தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பிடித்துக் கொண்டதை அடுத்து ஆட்சி கன்சர்வேட்டிவ் கட்சியின் கைக்குச் சென்றுள்ளது.

இதேவேளை, மூன்றாம் இடத்திலிருந்த லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசை அமைக்கும் முயற்சிகளில் கன்சர்வேட்டிவ் கட்சியும் தொழிலாளர் கட்சியும் ஈடுபட்டிருந்தன.

ஆனாலும் கன்சர்வேட்டிவ் கட்சியின் பேச்சுகள் வெற்றி அடைந்திருந்த நிலையில் லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து டேவிட் கமரூன் ஆட்சி அமைத்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 70 ஆண்டுகளில் முதன் முறையாக பிரிட்டனில் கூட்டணி அரசு அமைக்கப்படுவதுடன், 200 ஆண்டுகளின் பின்னர் இளம் வயதுடைய ஒருவர் பிரதமராகப் பதவியேற்கின்ற பெருமையை கமரூன் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

பிரிட்டனின் புதிய பிரதரும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவருமான டேவிட் கமரூன் 1966 ஒக்டோபர் 9 ஆம் திகதி லண்டனில் பிறந்தார்.

பங்குச்சந்தை தரகரான பொனால்ட் கமரூன் மேரி ப்ளர் மௌனட் தம்பதிகளின் மகனான கமரூனிற்கு ஒரு சகோதரரும் இரு சகோதரிகளும் உண்டு.

லண்டனில் பிறந்த கமரூன் பேர்க்செயரின் பீஸமோர் பகுதியில் வளர்ந்தார்.

ஆனால், கமரூனின் மூதாதையர்கள் ஸ்கொட்லாந்தின் ஹைலாந்து பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பேர்க் செயரினிலுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றிலும் உயர்தரப் பாடசாலை ஒன்றிலும் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த கமரூன், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் உளவியல், அரசியல் மற்றும் பொருளாதாரத் துறை பட்டதாரி ஆனார்.

பாடசாலைக் கல்விக் காலத்தில் பாடசாலை வளாகத்தில் கன்னாபிஸ் என்ற போதைப் பொருளை புகைத்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இக் குற்றத்தை ஏற்றுக்கொண்ட கமரூன் தான் போதைப் பொருள் கடத்தவில்லை எனக் கூறியுள்ளார்.

இருந்தாலும் அவருக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டு பாடசாலையைவிட்டு வெளியேற்றத் தடைவிதிக்கப்பட்டதுடன், 500 வரி கொண்ட லத்தீன் கட்டுரை ஒன்றை திரும்பத் திரும்ப எழுதும்படியும் தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலும் பாடசாலையைவிட்டு இடைநிறுத்தவில்லை.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் கன்சர்வேட்டிவ் ஆராய்ச்சி திணைக்களத்தில் பணியாற்றிய கமரூன் 1991 இல் பிரதமரின் அரசியல் செயலாளராகவும் அதற்கு முன்னர் கன்சர்வேட்டிவ் ஆராய்ச்சித் திணைக்களத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

பின்னர் 1992 இல் அரசியல் நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திய கமரூன் 1993 இல் பாராளுமன்றத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளரானார்.

இந்நிலையில், 1996 இல் சமந்தா ஷெபீல்ட் என்பவரை மணம் முடித்த கமரூனிற்கு 3 குழந்தைகள் உண்டு.


2003 இல் நிழல் அமைச்சராகவும் 2004 இல் எதிர்க் கட்சியின் பேச்சாளராகவும் பின்னர் நிழல் கல்வி அமைச்சராகவும் பணியாற்றி 2005 இல் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரானார்.

அன்றுமுதல் 2010 மே 10 வரை எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிய கமரூன் கடந்த பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை வெற்றியை கட்சி பெறாத நிலையில் லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசை அமைத்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி பிரிட்டன் பிரதமாராகியுள்ள கமரூன், குடியேற்றவாசிகள் குறித்த விடயத்தை எவ்வாறு கையாளப்போகின்றார் என பதுதான் ஆசிய நாட்டவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமியில் வெளியாகும் வாயுவை வைத்து பூகம்பம் வருவதை அறியும் தவளை

பூகம்பம் ஏற்படப்போவதை குறைந்தது 5 நாட்களுக்கு முன்னதாக தவளைகள் அறியக்கூடும் என்று பிரான்ஸில் நடந்த ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸைச் சேர்ந்த புவியியல் ஆராய்ச்சியாளர் ரசெல் கிரான்ட் தலைமையிலான குழு பூகம்பம் ஏற்படுவதற்கு முன் தவளைகளின் நிலை என்ன என்று ஆராய்ச்சி நடத்தினர். அது தொடர்பான அறிக்கை ஜூவாலஜி ஜர்னல் என்ற இதழில் வெளியாகியுள்ளது.

அதில் ரசெல் கூறியுள்ளதாவது;

இத்தாலியின் லாகுய்லா நகரில் கடந்த ஆண்டு ஏப்ரலில் பூகம்பம் ஏற்பட்டது.அதில் 300 பேர் பலியாகினர். 40,000 பேர் வீடிழந்தனர். அந்தப் பகுதியில் பூகம்பத்துக்கு ஐந்து நாட்களுக்கு முன்பு வரை வசித்த தவளைகள் பூகம்பம் ஏற்பட்ட தினத்தில் ஒன்றுகூட இல்லாமல் போயிருந்தன. அதை வைத்து தவளைகளுக்கு பூகம்பத்தை முன்கூட்டி அறியும் திறன் உள்ளதா என்ற கோணத்தில் ஆய்வு நடந்தது. பூகம்பம் ஏற்படுவதற்கு முன் பூமியில் இருந்து வெளியாகும் ஒருவித வாயு துகள்களை வைத்து ஆண் தவளைகளால் பூகம்பத்தை கணிக்கமுடியும் என அதில் தெரியவந்தது.குறைந்தது 5 நாட்களுக்கு முன்பே ஆண் தவளையால் பூகம்பம் ஏற்படப்போவதை உணர முடியும்.இதை வைத்து முன்கூட்டி பூகம்ப எச்சரிக்கை விடுக்க முயற்சிக்கலாம் என்றார்.

இதற்கு முன் நடந்த ஆராய்ச்சிகளில் பூகம்பத்துக்கு முன் புவியீர்ப்பு அலைகள் அல்லது ரேடியோ ஆக்டிவ் வாயு வெளிப்படுதல் ஆகியவற்றைக் கொண்டு பூகம்பம் ஏற்படப்போவதை முன்கூட்டி அறியலாம் என்று கூறப்பட்டது. எனினும் அதுபற்றி தெளிவான நிலை இல்லை.யானை, குதிரை, நரி,பாம்பு ஆகிய விலங்குகள் மூலம் ஆராய்ச்சிகள் நடந்தன.இந்நிலையில், தவளைகளால் பூகம்பத்தை முன்கூட்டி கணிக்க முடியும் என்ற ஆய்வு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

## வலியில்லாத ஊசி மருந்து

### ஜப்பானின் கண்டுபிடிப்பு

மனிதர்களின் நோய் குணமடைய உடலில் ஊசி மருந்து செலுத்தப்படுகிறது. இதனால் வலி ஏற்படும் என்பதால் ஊசி போட்டுக்கொள்ள குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவரும் அச்சப்படுகின்றனர். இந்த அச்சத்தைப் போக்கி வலி இல்லாத வகையில் போடும் மருந்து ஊசியை ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் கண்டு பிடித்துள்ளார்.

இந்த ஊசிகள் கரையக் கூடிய பாலிமர் இழைகளால் தயாரிக்கப்பட்டது. இதை உடலில் குத்துவதன்0 மூலம் தோலின் அடிப்பகுதி சேதமடையாது. வலி ஏற்படாது.

இந்த மைக்ரோ ஊசிகள் 0.5 மி.மீற்றர் நீளமும், 0.3 மி.மீற்றர் அகலமும் கொண்டது. இந்த ஊசி அண்மையில் சோதனை செய்து பார்க்கப்பட்டது.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## டைனோசரின் அழிவுக்கு புதுக் காரணம்

உருவத்தில் பெரிய, இராட்சத விலங்கினம் டைனோசர். பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வசித்த இந்த விலங்கு இனம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இதற்குக் காரணம் 'விண்வெளியில் இருந்து பூமியில் விழுந்த விண்கற்கள்' என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், டைனோசரின் அழிவுக்குக் காரணம் விண்கற்கள் அல்ல என்று தெரியவந்துள்ளது. பூமியில் ஏற்பட்ட தட்ப வெப்ப மாறுதல்கள் காரணமாகவே டைனோசர்கள் அழிந்தன என்கிறார்கள்.


நோர்வே நாட்டில் உள்ள ஸ்வெல்பார்டு என்ற இடத்தில் சமீபத்தில் டைனோசர் புதைபடிமங்கள் கிடைத்தன. இந்தப் படிமங்களை டாக்டர் கிரிகோரி பிரைஸ் தலைமையிலான குழு ஆய்வு செய்தது. அப்போது தான் டைனோசர் அழிவுக்கு தட்ப வெப்ப மாற்றம் தான் காரணம் என்பது தெரிய வந்தது.

சுமார் 13 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் தட்ப வெப்ப நிலையில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டது. இந்த மாற்றம் படிப்படியாக உருவானது. பூமி சூடாவது நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது என்று நாம் இப்போது கூறுவது போன்ற நிலை அப்போது காணப்பட்டது. இதன் காரணமாக வடதுருவத்தில் பனிமலைகள் உருக்கி அதன் குளிர்ந்த தண்ணீர் கடலில் கலப்பது அதிகரித்தது.


இதைத் தொடர்ந்து கடலில் வெப்பம் வெகுவாகக் குறைந்தது. 4 டிகிரி செல்சியஸ் முதல் 13 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் குறைந்ததால் கடலில் மட்டுமன்றி பூமியிலும் வெப்ப மாறுதல்கள் உருவானது. இதனால் கடல் மற்றும் பூமியில் வாழ்ந்த உயிரினங்கள் பாதிக்கப்பட்டு உயிரிழந்தன. இப்படித்தான் டைனோசர் இனமே அழிந்தது. இந்த அழிவும் ஒரே நாளில் நடக்கவில்லை. படிப்படியாக அழிவு தொடர்ந்து முற்றிலும் அந்த இனமே இல்லாமல் போய்விட்டது.

இது எல்லாவற்றையும்விட டாக்டர் கிரிகோரி இன்னொன்றையும் சொல்லி மிரட்டுகிறார். அது;

'டைனோசர் அழிவு தொடங்கும் போது எந்த மாதிரியான தட்ப வெப்ப சூழ்நிலை இருந்ததோ, அதுபோன்ற ஒரு நிலை இப்போது தொடங்கி உள்ளது. இந்த நிலை நீடிக்கும் போது பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது போன்ற ஒரு அழிவை மனித இனம் சந்திக்க வேண்டியிருக்கும்'.



## உடல் வெப்பத்தால் செல்போன் சார்ஜ் செய்யலாம்



உடல் வெப்பத்தால் செல்போன் சார்ஜ் செய்யலாம். நமது உடலின் வெப்பநிலை கூடினாலோ, குறைந்தாலோ உடல் நோய்வாய்ப்படும். நமது இயக்கத்துக்கு ஏற்ப வெப்ப ஆற்றல் வெளிப்படும். மாறுபடவும் செய்யும். இப்படி உடல் இயக்கத்தால் ஏற்படும் அதிகப்படியான வெப்பத்தை சேகரித்து அந்த ஆற்றலைக் கொண்டு எலக்ட்ரானிக் கருவிகளை இயக்க ஒரு கருவி தயாரித்துள்ளது எம்.ஐ.டி.பல்கலைக்கழகம்.

நடப்பது, ஓடுவது என எந்த வேலையில் ஈடுபட்டாலும் குறிப்பிட்ட அளவில் ஆற்றல் செலவாகிறது. அதில் ஒரு பகுதி வெப்ப ஆற்றலாக வெளியேறுகிறது. இந்த வெப்ப ஆற்றலையும், சுற்றுப்புறத்தில் உள்ள காற்றில் உள்ள ஆற்றலையும் கிரகித்து மின் ஆற்றலாக சேமிக்கிறது இந்தக் கருவி. இதைக் கொண்டு 2 வோட் மின்சாரத்துக்கும் குறைவான பயன்பாட்டில் இயங்கும் எலக்ட்ரோனிக் கருவிகளை இயக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

செல்போன் உள்ளிட்ட பல்வேறு எலக்ட்ரோனிக் கருவிகள் மிகக் குறைந்த மின் ஆற்றலில் இயங்கக் கூடியவை. எனவே இந்த கருவியில் சேமிக்கும் மின் ஆற்றலைக் கொண்டு இனி செல்போன்களை சார்ஜ் செய்ய முடியும். சார்ஜரை தேடிக் கொண்டோ, தூக்கிக் கொண்டோ திரிய வேண்டாம். அனைவரும் பயன்படுத்தலாம் இந்த இலாபமான கருவியை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை



# செத்த வீடு

க.நி.இனியபாரதி
மகாஜனாக் கல்லூரி

'அவன் என்னடி அவன்.... உவன் தான் எங்கட பக்கத்து வீட்டு மணிச்செல்வன்.... இரவில படுக்கவிடுறானே....கனகம் அக்கா அடிச்சாவோ....சிவத்தார் அண்ணர் அடிச்சாரோ...பாஸ்கரன் அடிச்சானோ....அடித்தவரை சொல்லியழு....ஆக்கினைகள் பண்ணிவைப்பேன்...அதுவும் பிலத்தாயல்வே இரவு முழுக்க பிள்ளையை ஓராட்டுறான்...என்றாலும் குடிசனம் குறைந்த இந்த இடத்தில அந்த ஓராட்டுதான் ஒரு வகையில் எங்களுக்கு பம்பல்...' ஏதோ வாய்நிறைய வைத்திருந்ததை கொட்டித் தீர்த்து விட்டது போல், தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு நீண்ட பெருமூச்சுடன் மீண்டும் தொடர்ந்தாள் கனகாம்பரம்.....

அந்தக் காலத்திலே இருந்து 'பகுடி' என்று சொன்னால் அது கனகமக்காதான். கதைகளில் நளினம் பேசுவதில் தான் அவர் எத்தனை பெரிய திறமைசாலி. அவருடைய கதைகளைக் கேட்பதற்காக ஒரு கூட்டமே அவர் பின்னால் நிற்கும்.

முணுமுணுத்த குரல்கள் சற்றே உச்சஸ்தாயிக்குச் சென்றன. 'என்ர ஐயோ...ஐயோ...என்னை விட்டுப் போனியளே...' யாரோ கிழவனுக்குக் கிட்டிய சொந்தக்காரர் போல கிடக்குது. கனகாம்பரமும் அவர்களுடன் ஓடிச்சென்று சக்கர வியூகம் போட்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள்.

சற்று நிமிடங்களுக்கு எல்லாம் முந்தானையைக் கண்களில் ஒற்றிக் கொண்டு, மூக்கைச் சீறி சேலையில் துடைத்துக் கொண்டு மீண்டும் அரட்டையடிக்கும் கும்பலுக்குள் அமர்ந்து விட்டாள்.... எத்தனை பெரிய மனசு கனகமக்காவுக்கு..

பெண்கள் பக்கம் என்காது சற்றுக் கூர்மையானது. கனகமக்கா தொடர்ந்தாள்... 'கிழவனோட மூத்தமேள் கனடாவிலிருந்து வர சுணங்குமாம், சிலவேளை நாளைக்குத்தான் சவம் எடுப்பினமாம்...' எனக்கு தூக்கிவாரிப் போட்டது. ஏற்கனவே இரண்டுநாள் இந்த செத்தவீட்டிலேயே மெனக்கெட்டாச்சு. ஊரை எப்ப சுற்றிப் பார்க்கிறது. அதைவிட அடையாள அட்டையிலக்கம் பிறந்த ஆண்டோட பொருந்தாததால இங்கிருந்து கொழும்புக்கு போறவையள் மாதிரி 'பாஸ்' எடுக்க வேணும். 'கிளியரன்ஸ்' எடுக்கிறது என்றால் ஏதோ உடுவில் கிடுவில் என்று ஆமிக்கு பின்னால அலைய வேணுமாம்.

நீண்டகாலமாக கொழும்பில் இருந்து விட்டு வந்த எனக்கு இந்த மூன்று கிழமை விடுமுறையில் அப்படி முழு யாழ்ப்பாணத்தையும் ரசித்து விட முடியுமா...? அந்தக் காலத்தில் தான் எத்தனை எத்தனை இன்பங்கள்..... யாழ் மண்ணை சுவாசிக்க வரம் கேட்டே நாம் தவமிருக்கவேண்டும். 'தேன் தமிழோதும் யாழ் நாடே....' என்று விளித்தார்களே, இதைவிட வேறு எதைச் சொல்லவேண்டும்.

நேரம் கடந்து கொண்டிருந்தது...ஒரே ஆசனத்தில் எவ்வளவு நேரம்தான் அப்படியே உட்கார்ந்திருப்பது. செத்த கிழவனைப் பார்க்கத் தான் வெளிநாடுகளில் இருந்து எத்தனை சொந்தங்கள் பறந்து வருகின்றன. ஏதோ...எனக்கும் கிழவன் தூரத்துச் சொந்தமாம். சுற்றிப் பார்த்தால் இந்த ஊரே ஏதோ ஒருமுறையில் எனக்கு தூரத்துச் சொந்தம் தான். பெற்றோரின் நச்சரிப்பு தாங்கமுடியாமல் இங்கு வந்து குந்தியிருக்கிறேன்.

மெதுவாக வெளியே நழுவி வந்து என் துவிச்சக்கர வண்டியை மிதித்த போது தான் எனக்கு ஓரளவு ஆறுதல்... 'இண்டைக்கு எப்பிடியாவது ஒரு தடவையாவது ஊரைச் சுத்திப் பார்த்துக் கொண்டு வரவேணும்...' மனதுக்குள் ஆயிரமாயிரம் புதிர்களும் பதில்களும்.

'கீரிமலையானே! எப்படியிருந்த கிளியக்கான்ர வீடு தரைமட்டமாகிப் போய் கிடக்குது... அது வேற வீட்டுக்குள்ள நாயுண்ணிப் பத்தையும் வளர்ந்துபோய் கிடக்குது.... அவ வெளிநாட்டில இருந்தாலும் ஒருக்கா வந்து எல்லையை சரி செய்து பத்தையளைவும் வெட்டி, வேலியையும் போட்டு விட்டு போனால் அறுக்கையாயிருக்குமல்லே..... வெளிநாடுகளும் உவைகளுக்கு நிரந்தரமே...பிறகு பிள்ளை குட்டியள் வந்திருக்கிற தென்டால், ஒரு வீடு கீடு வேண்டாமே...'

என் சிந்தை சிதறியது. எங்கோ தூரத்திலேயே அழும் சத்தம். நான் துவிச்சக்கர வண்டியின் மிதியை எட்டி மிதித்தேன். நெருங்க, நெருங்க ஒலியின் உரப்புக் கூடியது. யாரோ பீறிட்டு அழுதார்கள்.

அட, நம்ம மணிச்செல்வன் அண்ணர் வீட்டுக்குள்ள இருந்து தான் சத்தம் வருது... எனக்குக் கொஞ்சம் பயமாகவேயிருந்தது. மீண்டும் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வீட்டுக்கு ஓடி விடுவோமா என்ற எண்ணம் வேறு...நான் கொழும்பில் இருக்கும் போது வழமையாகப்படிக்கும் நாளிதழில் தினமும் மலரும் செய்திகள் தான் கண்ணுக்குள் பொதிந்தன... 'யாழ்ப்பாணத்தில் இருவர் சுட்டுப்படுகொலை..., சிலர் வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிப்பு..., சிலர் சடலங்களாக மீட்பு...' அப்போதெல்லாம் யாழ்ப்பாணத்தை நினைத்தாலே எனக்கு அடிவயிறு கலக்கும்... இப்போ ஏதோ நிலைமைகள் கொஞ்சம் சீரானதால தான் யாழ்ப்பாணத்துல காலடி எடுத்து வைத்திருக்கிறேன்.

மனதை ஓரளவு சுதாகரித்துக் கொண்டு மணியண்ணை வீட்டை நெருங்கினேன். சில பெண்கள் கண்களால் விழியருவி சொரிய விம்மி விம்மி அழுது கொண்டே வந்தனர்.

'மணி எவ்வளவு நல்லவர்.... காசுக்காக அவரைச் சுட்டுட்டாங்களே...' எனக்கு அடிவயிறு கொஞ்சம் கலக்கியது... 'ஓமடி, ஞாயம் கேட்கப்போன மனுசின்ர கழுத்தையும் நெரிச்சுக் கொண்டுட்டாங்களே... இனிமேல் அந்தக் குழந்தை தாய்தகப்பன் இல்லாமல் என்ன செய்யப்போதோ...? அதை நினைக்கத் தான்டி எனக்கு அழுகை அழுகையா வருது.... பாவம் பச்சக் குழந்தை...' அழுது அழுது கொண்டே கதைத்துச் சென்றனர்.

'எந்தமணி...நம்ம மணிச்செல்வன் அண்ணரோ...' எனக்கு இதயம் வலித்தது. உள்ளுக்கு எட்டிப் பார்த்தேன் தொலைக்காட்சியில் எழுத்தோட்டம் போய்க் கொண்டிருந்தது. திரையின் கீழ் மூலையில் சற்று தடித்த எழுத்தில் 'மணி மீண்டும் வருவான்...' எனக்கு இப்போதுதான் போன உயிர் மீண்டும் திரும்பி வந்தது மாதிரி இருந்தது.

'நாளைக்குத் தான்டி பொறுத்த கட்டம்...நேரத்துக்கு சமைச்சுப் போட்டு இருக்க வேணும்...' கதையளந்தபடி வெளியே வந்தனர் கனகமக்காவும் மணிச்செல்வன் அண்ணயோட மனுசியும்.

என்னைக் கண்டு அசந்து போன மணியன்னண் மனுசி 'எப்ப தம்பி வந்தனி உள்ளுக்கு வாவன்...', 'இல்லையக்கா நான் செத்த வீட்டால வாறன் பிறகு முழுகிப் போட்டு ஆறுதலா வாறன்....'

'இப்ப ஆர் தம்பி உதுகளை பாக்கினம்... செத்த வீட்டால கோயிலுக்கும் நேர போகுதுகள்...' சடங்கு, சம்பிரதாயம், முறை பார்க்கிற கனகமக்காவா உப்புடி... அட, விடுய்யா... தொடர்நாடகம் கனகமக்காவினுடைய கண்களில் பொய் படர்ந்திருந்தது....மனமே சரியான பதிலை எண்ணி முடித்தது...ம்ம..யாழ்ப்பாணம் எங்கே போகிறது? வேறு எதைச் சொல்ல......

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலைபோகும் அன்னை பூமி

அழகிய ஈழம்
அசிங்கப்படுகிறது.
எப்போது அனர்த்தம் நிகழுமென
ஏங்கிநிற்கும் வெள்ளைக்காரன்
உள்நாட்டு இறப்பரையெல்லாம்
அள்ளி வந்து கொட்டுகிறான்.
விற்க முடியாத இருப்பையெல்லாம்
நிவாரணமாய்த் தள்ளுகிறான்
ஆடம்பர மோகத்தை
அள்ளி விதைத்து
ஆபாசங்களை அலையவிட்டு
போதைகளை
பாவைகளுக்கேற்றி
ஒன்றுபடும் இளமைகளை
உருக்குலைத்து
கலங்கிய குட்டையில்
மீன்பிடிக்கப் பார்க்கிறான்
வேறுபல திசைகளிலிருந்து
பறந்து வந்த வெண்புறாக்கள்
இராணுவத்தளம் அமைக்க
இடம் தேடுவது ஏன்..?
அபிவிருத்திப் பணி செய்வோர்
கிடங்கு வெட்டி மண்எடுத்து
கனிய ஆய்வு நடத்துவது ஏன்..?

மனிதாபிமானி என்பேரர்
உள்நாட்டுப் பலயீனம் பார்த்து
பக்கம் பக்கமாய் அறிக்கை விடுவது ஏன்..?
விழுந்து கிடக்கும் எம்மை
வலக்கையால்
அணைத்தெடுப்பது போல் காட்டி
இடக்கையால்
உரித்தெடுப்பது ஏன்..?

ஆசைக்கும்
அதிகாரத்திற்கும்
அடிபணியும் கதிரைகளால்
அன்னை பூமி விலை போகிறது
யாரோடு நோவோம்..?
யார்க்கெடுத்துரைப் போம்..?

**வே. முல்லைத்தீபன்**
**ஒட்டுசுட்டான்.**

## காதல் வசம்

சிட்டுக்குருவியின்
ஓசையின் இனிமையை
நீ! என்னுடன் பேசிய
பிறகுதான் உணர்ந்தேன்!
நீ கண்ணசைத்து
பார்த்த போது நான்
கப்பலேறி விட்டேன்
உன் இதயத்தை அடைய!

**ர.ரூசி, சமரபாகு.**

## நீ

மௌனமான நேரம்
என் மனதில் சிறுபாரம்
உன் மனதில் என்ன
நினைத்தாய்...

என் மனசில் உன்னை
விதைத்தாய்!
விதைத்து விட்டு-நீ
விளங்க முடியாத
புதிராய்-என்
வாழ்வில் விடுகதையாக
விடுபடாமல்-என்றும்
நீ என் தொடர்கதையாக
தொடர்ந்திடனும்...

**ஆர்.ஜெயமோகன்**
**கரணவாய் தெற்கு**
**அண்ணாசிலையடி**




## உணர்ந்துகொள் மனிதா!

பத்தாவது தலைமுறைக்கு
பணம் தேடும் மனிதா
பக்கத்து வீட்டுக்காரன்
பட்டினி கிடப்பதைப் பாராயோ

இருவர் வாழ
இரு மாடி வீடு கட்டி
துணியும் போடும் மனிதா
ஒழுகும் ஓலைக் குடிசையில்
ஒட்டுத் துணியுடன்
ஒட்டிய வயிற்றுடன்
கண்ணீருக்குள்
காலம் கடத்தும்
ஏழையைப் பாராயோ

ஆடை அணிகலன் அணிந்து
ஆண்டவனை
அலங்கரிக்கும் மனிதா
பிறப்பில் இருந்து
காதுத் தோடு கூட இன்றி
குமரிப் பருவத்திலும் வாழும்
மங்கையைப் பாராயோ

மானிடர்க்கு கொடுக்கத்தானே
மண்ணுலகில்
ஆண்டவன்
அவதரித்தான் மனிதா
ஆடை அணி கலன்
ஆண்டவன்
உன்னிடம் கேட்பதாய்
எந்த மதமும் சொல்லவில்லையே
இந்த உண்மையை
ஏற்பாயோ மனிதா

இந்த நொடி வாழும் மனிதா
மறு நொடி– நீ
மரணத்தில் வீழ்ந்தால்
உன்னுடன் வருவது
யார் எது மனிதா

நீ செய்த
நன்மையும் தீமையுமே
இதை உணர்ந்துகொள் மனிதா

**ம.சுமன்.**

Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு–15

## காதலின் உயர்வு

பார்த்தவுடன் வருவது
தான் காதல்
பழகிய போது
ஒருவரையொருவர்
புரிந்துகொள்வது
தான் காதல்
பள்ளிக் காலங்களிலே
இடையிடையே
வந்து போகும்
பசுமையான நினைவுகளே
இந்தக் காதல்!

துள்ளித் திரியும்
வேளை தனில்
சோகங்களையும்
சுகங்களையும்
சொல்லித்தரும்
சுதந்திர கீதமே காதல்!

பணத்தால் வருவதல்ல
உண்மையான காதல்
பண்பு பாசம் நேசம்
புற்றெடுக்கும் இன்ப
ஊற்றே காதல்!

கரும்பு போல
இனிப்பதே காதல்
கனவுகள் காணும்
விந்தை உலகமே காதல்
உள்ளமிரண்டு
இணைவதே காதல்!

உயிருக்குள் உயிராகும்
உன்னத காவியமே காதல்

கண்களின் சந்திப்பினால்
கட்டுண்டச் செய்த காதல்
கற்பனைகள் ஆயிரம் காண
களமமைத்துத் தந்த
கருவூலமே காதல்!

பருவ இராகங்கள் பல
பாடும் காதல்
பாலைவனத்திலும்
பசுமையைக் காட்டிடும்
ஓர் உணர்வே காதல்!

காமம் கொண்டு
பழகுவதல்ல காதல்
கனிவாக ஈருயிரும்
கலந்துவாவும்
தேசிய கீதமே காதல்!

இரு உள்ளங்களின்
உணர்வே காதல்
இரு உள்ளங்களின்
மொழியே காதல்
வாலிபத்தின்
வைர நினைவுகளே காதல்
வற்றாத இன்ப
ஊற்றே காதல் !

ஏமாற்றுவதற்கல்ல காதல்
இறுதிவரை எம்மோடு
கூட வரும்
இளமைக் காலத்தின்
அழியாப் பக்கமான காதலே
என்றும் வருவாய்
எம் துணையாக...

**செ. ரவிசாந்,**
**(வீரமனை, குப்பிளான்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளியூர் மாணவர்களின் வாடகை பிரச்சினை




இலங்கைத் தமிழர்கள் நாட்டின் ஆட்சி தொடர்பாக அவரவருக்கென தனிப்பட்ட முறையில் பல்வேறு விருப்பங்களையும் கருத்துகளையும் கொண்டிருப்பினும் தற்போதைய அமைதிச் சூழ்நிலை அம்மக்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமையை மறுப்பதற்கில்லை. சுமார் மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்து யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து நாட்டின் தலைநகர் உள்ளிட்ட தென்பகுதிகளில் வாழ்ந்தவர்களும் புலம்பெயர்ந்து சென்றவர்களும் பல வருடங்களின் பின் சொந்த மண்ணைக் காண விரைகிறார்கள். சிலர் விருந்தாளிகளாகவும் சுற்றுலாப் பயணிகளாகவும் தாய் மண்ணிற்குச் செல்கிறார்கள்... வேறு சிலர் மீண்டும் அங்கு நிரந்தரமாக வாழச் செல்கிறார்கள்.

யுத்தத்தின் கோர பாதிப்புகளிலிருந்து ஒரு தரப்பினர் இன்னும் முழுமையாக மீளாத போதிலும் உறவுகளை இழந்த சோகம் அடிமனதில் இழையோடியிருப்பினும் தம் உறவுகளைக் காணவும் அவர்களுடன் ஒன்றுகூடி மகிழவும் தம் தாய் மண்ணைக் காணவும் யாழ். நோக்கிப் பயணிக்கின்றனர். வியாபாரம், சுற்றுலா எனப் பல்வேறு காரணங்களுக்காக அங்கு செல்பவர்களால் யாழ்ப்பாணம் நிரம்பி வழிகிறது.

இந்த இன்பமான சூழ்நிலையால் பலர் துன்பங்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு வருகின்றது. அத்தகையோரில் யாழ்.பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளிமாவட்ட மாணவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பட்டதாரிகளாகும் கனவுகளுடன் பெற்றோரைப் பிரிந்து தனியாக வந்து பயிலும் மாணவர்களே மிகச் சிக்கலான நிலைக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலையிலுள்ளார்கள். இவர்கள் முன் தற்போதைய பூதாகரமாக உருவெடுத்துச் செல்லும் பிரச்சினை இருப்பிடம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் போதிய விடுதி வசதிகள் இல்லை. இதனால் மாணவர்களின் பல்வேறு வசதிகள் மற்றும் நலன்கருதி, இப்பல்கலைக்கழகத்தில் முதல் வருடத்திலும் இறுதியாண்டிலும் கற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு மட்டுமே விடுதிவசதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஏனையவர்கள் பல்கலைக்கழகத்தை அண்மித்த வீடுகளில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அவற்றிலேயே தங்கியுள்ளனர்.

ஆனால், தற்போது வீட்டு உரிமையாளர்களின் உறவினர் வந்து தங்குவதற்காகவும் சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு வழங்கவும் எனப் பல்வேறு காரணங்களால் ஓர் அறையை வாடகைக்குப் பெறுவது சிரமமான விடயமாகிவருகிறது. வாடகைக் கட்டணங்களும் அதிகரித்து வருகின்றன.

இதுவரை 500-750 ரூபா வரையிலான கட்டணத்தை மாதாந்தம் செலுத்திய மாணவர்கள் (சில இடங்களில் 350 ரூபாவுக்குக் கூட ஓர் அறையைப் பெறக் கூடியதாக இருந்தது) தற்போது 1000-3000 ரூபா வரையில் வாடகை செலுத்த வேண்டி ஏற்படுகிறது.

இதன் பெறுமதியில் 5-10 மடங்கு அதிகமான பணத்தை வாடகையாகச் செலுத்தும் கொழும்புப் பல்கலைக்கழக மாணவருடன் ஒப்பிடுகையில் இத்தொகை சிறிதுதான். ஆயினும் கொழும்பு பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில் தூரப் பிரதேச, வசதி குறைந்த மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்பட்டுள்ளன. வசதி படைத்த மற்றும் தனியிடங்களை விரும்புவோரே இவ்வாடகை செலுத்தி தனியறைகளைப் பெறுகின்றனர். ஆனால், யாழ்.பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் வசதி குறைந்த மாணவர்களும் தங்கள் சக்திக்கு அதிகமாகப் பணம் செலவழித்து வெளியிடங்களில் தங்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது. இந்நிலையில் வாடகை அதிகரிப்பு அவர்களை மேலும் பாதிக்கின்றது.

வாடகை அதிகரிப்பு ஒருபுறமிருக்க சில இடங்களில் இம்மாணவர்களுக்கு அறை வழங்க மறுக்கின்றனர். ஏற்கனவே வாடகைக்குத் தங்கியிருக்கும் மாணவர்களையும் வெளியேறுமாறு சில வீட்டு உரிமையாளர்கள் நிர்ப்பந்திக்கின்றனர். ஒரு சுற்றுலா பயணி ஒரு குடும்பம் ஒருநாள் தங்குவதற்கு இடமளிப்பதன் மூலமே 1000 ரூபா வரையில் வாடகை பெறக்கூடிய சூழ்நிலை காணப்படுவதால் மாதாந்தம் 1000 ரூபா தரும் மாணவர்கள் வெளியேற்றப்படுகின்றனர். வாடகைக் குடியிருப்பாளர்கள், ஒப்பந்தங்களைச் சட்டரீதியாக ஏற்படுத்திக்கொள்வது போன்று இம்மாணவர்கள் ஒப்பந்தங்கள் ஏற்படுத்தாமையினால் இவர்களை இலகுவில் வெளியேற்ற முடிகிறது. இதனால் பல மாணவர்கள் தற்போது நண்பர்களின் வீட்டு வரவேற்பறையிலும் வீட்டுக்கு வெளியேயுள்ள ‘போட்டிக்கோ’ எனப்படும் மண்டபத்திலும் தங்கியுள்ளனர். இதன்மூலம்அவர்கள் தங்க இடம் கிடைக்கும் போதிலும் இது அவர்கள் கல்வி நடவடிக்கைக்கு உகந்ததாக இல்லை.

இந்நிலையில் வீட்டு உரிமையாளர்கள் மீதும் கோபப்பட முடியாது. அவர்களுக்கும் வருமானம் தேவைதானே! இம்மாணவர்களுக்காக அவர்கள் தம் வருமானத்தை இழக்க வேண்டுமா? எனவும் பலர் கேள்வியெழுப்புகின்றனர். வசதியை விரும்பும் அவர்களை கண்டிக்கவோ, குறைகூறவோ முடியாதுதான். இவ்விடயம் தொடர்பில் கவனஞ்செலுத்த வேண்டியது கூட அரசாங்கம் மற்றும் உயர் கல்வி சார் அரச அமைப்புகளின் கடமையே, இம்மாணவர்களுக்கு உரிய விடுதி வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதும் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் ஒன்றுதானே?

ஆயின் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வரையில் அம்மாணவர்களுக்கு உதவ சமூகமும் முன்வர வேண்டும். பணத்தைப் பெருக்குவதில் கவனஞ்செலுத்தும் வீட்டு உரிமையாளர்கள், கொஞ்சம் இம்மாணவர்களுக்கும் இடமளிக்க முன்வரலாமே! நாளை இப்பட்டதாரிகள் நம் நாட்டுக்கும் நமக்குமே சேவையாற்றப் போகிறார்கள்! பட்டம் பெற்ற பின் பணந்தேடி பறக்கும் போது இவர்களும் சமூகத்தைச் சற்று சிந்திக்க வேண்டும்.

ஆனால், சமூக ஒத்துழைப்பு நிரந்தரத் தீர்வல்ல, அவர்களுக்கான விடுதி வசதி ஏற்படுத்தப்படுவதே நம் நாட்டின் எதிர்காலத்திற்குச் சேவை செய்யும் பட்டதாரிகளுக்கான பேருதவி.

எம்.தயானி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தொடரும் தோல்வி

கடந்த 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியைப் போலவே இந்த உலகக் கிண்ணத்திலும் இந்திய அணி அரையிறுதிக்குத் தகுதி பெறாமல் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

'சுப்ப-8' சுற்றில் 'எப்' பிரிவில் இடம்பெற்றிருந்த இந்திய அணி முதல் போட்டியில் அவுஸ்திரேலியாவிடமும் 2 ஆவது போட்டியில் மேற்கிந்தியாவிடமும் தோற்றது. கடைசிப் போட்டியில் இலங்கையைச் சந்தித்தது. இதில் கண்டிப்பாக வென்றால்தான் அரையிறுதி வாய்ப்பைப் பெறும் நிலையிலிருக்க முடியும். ஆனால், இந்திய அணி தோல்வியை தழுவிப் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இந்தியா 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 163 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் விளையாடிய இலங்கை அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டினால் வெற்றிபெற்றது. இந்த வெற்றி மூலம் இலங்கை அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

'சுப்ப-8' சுற்றில் இந்திய அணி ஒரு வெற்றிகூடப் பெற முடியாமல் போனது பரிதாபமே. தொடர்ந்து 3 ஆவது தோல்வியைச் சந்தித்தது. இங்கிலாந்தில் நடந்த கடந்த உலகக் கிண்ணத்தில் இதேநிலைதான் இருந்தது.

இலங்கையுடனான போட்டியில் இந்தியா முதல் 10 ஓவரில் 1 விக்கெட் இழப்புக்கு 90 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இதனால் 180 முதல் 200 ஓட்டங்கள் வரை எடுக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சொதப்பிவிட்டனர். தோனி 4 ஆவது வீரராகக் களம் வந்திருக்கக்கூடாது. இது போன்ற பல தவறுகள் சுப்ப-8 சுற்றில் நடந்துள்ளது.

மீண்டும் சொதப்பல்: ஐ.சி.சி. நடத்தும் சர்வதேச தொடர்களில் இந்தியா தொடர்ந்து சொதப்புகிறது. 2007 உலகக் கிண்ணத் (50 ஓவர்) தொடரில் முதல் சுற்றுடன் திரும்பியது. பின் 2009 'ருவென்ரி-20' உலகக்கிண்ணத் தொடரிலும் மோசமான தோல்வியைப் பதிவு செய்தது. பின் நடந்த சாம்பியன்ஸ் லீக் (மினி உலகக் கிண்ணம்) தொடரில் லீக் சுற்றுடன் திரும்பியது.

தற்போது இரண்டாவது முறையாக 2ருவென்ரி-20' தொடரில் 'சுப்ப-8' சுற்றுடன் வெளியேறியுள்ளது. 2011 இல் உலகக் கிண்ணத் (50 ஓவர்) தொடர் நடக்க இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில் இந்திய கிரிக்கெட் சபை விழித்துக் கொள்ள வேண்டும். லலித் மோடியுடன் வீண் அரசியல் செய்வதை தவிர்த்து திறமைவாய்ந்த இளம் வீரர்களை விரைவில் கண்டறிய வேண்டும்.

**வரலாறு தெரியாதா?**

1983 உலகக் கிண்ணம், 2007 ருவென்ரி-20 உலகக் கிண்ண இறுதியாட்டங்களில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இந்திய அணி கிண்ணத்தை வென்றுள்ளது. ஆனால், 2003 உலகக் கிண்ணத்தில் நாணயச்சுழற்சியில் வென்றும் களத்தடுப்பைத் தேர்வு செய்ததால் மோசமாக தோற்றது. இந்த வரலாறு தெரியாத தோனி 'சுப்ப-8' சுற்றின் இரண்டு போட்டிகளிலும் முதலில் களத்தடுப்பைத் தேர்வுசெய்து பெரும் தவறு செய்தார்.

**தேசம் முக்கியமல்ல?:**

மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப்புக்கு எதிரான போட்டியில் வெற்றிபெற்ற தோனி கூறுகையில்;

'ஐ.பி.எல். அணி உரிமையாளர்கள் ஏராளமான பணத்தை முதலீடு செய்துள்ளனர். அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும். குறைந்தது அரையிறுதி வரையிலாவது அணியைக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு மகிழ்ச்சி' என்றார். ஆனால், தேசத்தின் மானம் காக்கும் உலகக் கிண்ணத் தொடரில் கோடிக்கணக்கான ரசிகர்களை ஏமாற்றி விட்டார்.

தவறான தேர்வு: ஐ.பி.எல். தொடரில் சகலதுறை வீரரான இர்பான் பதான் அதிக விக்கெட்டைகைப்பற்றிய பிரக்யான் ஓஜா, அமித் மிஸ்ரா, மனிஷ் பாண்டே புறக்கணிக்கப்பட்டனர். மாறாக களத்தடுப்பு, துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் தொடர்ந்து சொதப்பும் ரவீந்திர ஜடேஜா அடுத்தடுத்து வாய்ப்புப் பெற்றார். சகிர்கான் காயத்துடன் பங்கேற்றார். அவ்வப்போது துடுப்பாட்ட வரிசையை மாற்றியதும் தோல்விக்குக் காரணமாகிவிட்டது.

ரெய்னா ஆறுதல்: இத்தொடரில் இந்தியா சார்பில் ரெய்னா மட்டுமே துடுப்பாட்டத்தில் சாதித்தார். இவர் 5 போட்டியில் தலா ஒரு சதம், அரைச் சதம் உட்பட மொத்தம் 219 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து தோனி (85), ரோஹித் சர்மா (3 போட்டி, 84 ஓட்டம்), யுவராஜ் (74), காம்பிர் (69), பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட முரளி விஜய் (57) மற்றும் யூசுப்பதான் (42) என வரிசையாக சொதப்பியது மோசமான தோல்விக்கு முக்கிய காரணம்.

பந்துவீச்சில் ஏமாற்றம்; இந்திய அணியின் பந்துவீச்சில் ஆஷிஸ் நெஹ்ரா மட்டும் அதிகபட்சமாக 10 விக்கெட் வீழ்த்தியுள்ளார். இவரை அடுத்து யூசுப்பதான் 4 தவிர பிரவீன்குமார், சகிர்கான், வினய்குமார் ஒரு போட்டி), ரவிந்திர ஜடேஜா, யுவராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட் கைப்பற்றியுள்ளனர். இதில் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவென்றால் முன்னணி சுழல்பந்துவீச்சாளர் ஹர்பஜன் 5 போட்டியில் ஒரு விக்கெட் கூட வீழ்த்தாதது பெரும் அதிர்ச்சி.




# கடினமான போட்டி



உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் தபலோவுடன் மோதிய கடைசி சுற்றுப் போட்டியை தனது செஸ் வாழ்க்கையில் மிகவும் கடினமான போட்டியாகக் கருதுவதாக விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

பல்கேரியாவின் சோபியாவில் உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடர் நடந்தது. 12 சுற்றுகள் கொண்ட இப்போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் பல்கேரியாவின் வாசெலின் தபலோவ் இருவரும் மோதினர். 11 சுற்றின் முடிவில் இருவரும் 5.5 புள்ளிகள் பெற்று சமநிலையில் இருந்தனர். 12 ஆவது மற்றும் கடைசி சுற்றுப் போட்டி செவ்வாய்க்கிழமை நடந்தது. இதில் வெற்றிபெற்ற ஆனந்த் 6.5 புள்ளிகளுடன் சாம்பியன் பட்டம் கைப்பற்றினார். இது ஆனந்த் கைப்பற்றும் நான்காவது உலக சாம்பியன்ஷிப் (2000, 2007, 2008, 2010) பட்டமாகும்.

இந்த வெற்றி குறித்து ஆனந்த் கூறுகையில்;

'உலக செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் வெற்றி பெற்றது மகிழ்ச்சியளிக்கிறது. தபலோவுடனான கடைசி சுற்றுப்போட்டியை எனது செஸ் வாழ்க்கையில் மிகவும் கடினமானதாகக் கருதுகிறேன். மற்ற எந்தப் போட்டியும் இதற்கு நிகரானதல்ல. இப்போட்டிக்கு முன் யாருக்கு வெற்றி கிடைக்கும் என்பது நிர்ணயிக்க முடியாததாக இருந்தது. தபலோவ் மிகச் சிறந்த வீரர். இப்போட்டி ஒருவருக்கு மட்டும் சாதகமாக அமையாது என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் இறுதியில் வெற்றி எனது பக்கம் திரும்பியது' என்றார்.

ஆனந்தின் வெற்றி குறித்து அவரது தந்தை விஸ்வநாதன், தாய் சுசிலா ஆகியோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். ஆனந்தை 'பாபா' என்று செல்லமாக அழைக்கும் அவரது பெற்றோர்கள் இது குறித்து கூறியதாவது;

'பாபாவின் வெற்றி மிகவும் சிறப்பானது. தற்போதும் அவர் மனநிலை வலிமையாகவே உள்ளது என்பதற்கு இவ்வெற்றி ஒரு உதாரணம். சிறு வயது முதலே எந்தச் சவாலாக இருந்தாலும் துணிகரமாகச் செயற்படக் கூடியவர் ஆனந்த். அவர் கட்டாயம் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது' என்றனர்.

ஆனந்தின் வெற்றிக்கு இந்திய மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் எம்.எஸ்.கில் பாராட்டுத் தெரிவித்துள்ளார். இது குறித்து கில் கூறுகையில்;

'உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை ஆனந்த் கைப்பற்றியது மகிழ்ச்சியளிக்கிறது. அவரை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இதன் மூலம் இந்தியாவுக்கு அவர் பெருமை சேர்த்துள்ளார்' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தால் வந்த வினை



உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி சந்தித்த படுதோல்விக்கு ஐ.பி.எல். 'பார்ட்டிகள்'தான் காரணமென கப்டன் தோனி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியாவில் நடக்கும் மூன்றாவது 'ருவென்ரி -20' உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி பரிதாபமாக வெளியேறியது. இலங்கைக்கு எதிரான முக்கிய 'சுப்ப-8' போட்டியில் இந்திய அணி முதல் 10 ஓவரில் ஒரு விக்கெட்டுக்கு 90 ஓட்டங்கள் எடுத்தது. பின் அடுத்த 10 ஓவரில் துடுப்பாட்டத்தில் சொதப்பி 20 ஓவர்கள் 5 விக்கெட்டுக்கு 163 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பின் இலங்கை அணிக்கு கப்டன் சங்கக்கார, மத்யூஸ் தலா 46 ஓட்டங்கள் அடித்து கை கொடுத்தனர். கடைசிப் பந்தில் கப்புகெதர 'சுப்ப சிக்ஸர் அடிக்க, 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 167 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதையடுத்து 'சுப்ப -8' சுற்றில் ஒரு வெற்றி கூட பெறாமல் 'ஹாட்ரிக்' தோல்வியுடன் இந்தியா வெளியேறியது.

இது குறித்து கப்டன் தோனி கூறியதாவது;

ஐ.பி.எல். காரணமாகத்தான் உலகக் கிண்ணத் தொடருக்குத் தயாராக முடியவில்லை எனக் கூறவில்லை. இத்தொடர் நமது பயிற்சிக்குப் பெரும் உதவியாக இருந்தது. இதன் மூலமாகத் தான் ரெய்னா, ரோகித் சர்மா, ஜடேஜா, பிரக்யான் ஒஜா, அமித் மிஸ்ரா போன்ற வீரர்கள் உருவாகினர்.

ஆனால் அதிக போட்டிகளில் விளையாட வேண்டிய நிலையில் வீரர்கள் தங்கள் உடல்நலத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும். ஐ.பி.எல். போட்டிகளுக்குப் பின் நடந்த 'இரவுப் பார்ட்டிகள்' மற்றும் அடிக்கடி பயணம் செய்தது போன்றவைகள் வீரர்களுக்கு கவனச் சிதறலை ஏற்படுத்திவிட்டது.

இலங்கைக்கு எதிராக 163 ஓட்டம் என்பது நல்ல இலக்கு தான். இருப்பினும் 180 இற்கும் அதிகமாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். தவிர சேவாக், சகீர்கான் மற்றும் பிரவீண்குமார் போன்ற வீரர்கள் இல்லாததும் இழப்பு தான். ஆனால் வீரர்கள் முழுத்திறமையை வெளிப்படுத்தி விளையாடவில்லை என்பது தான் உண்மை. இது ஏன் எனத் தெரியவில்லை. இருப்பினும் இந்தியா தான் சிறந்த 'ருவென்ரி-20' அணி என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையுடனான முக்கியமான போட்டியின் போது இந்திய வீரர்கள் சரியாக விளையாடவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

மேற்கிந்தியத்தீவிலுள்ள மைதானங்கள் வேகப்பந்துக்கு சாதகமானவை. ஆனால் இந்தியாவிலுள்ள ஆடுகளங்களின் தன்மையே வேறு. பவுன்சர் பந்துகளைச் சமாளிக்க முடியாமல் இந்திய வீரர்கள் திணற வேண்டியிருந்தது. 'ஷோர்ட் பிட்ச்' பந்துகளால் வீரர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல் தொடர்ந்து 150 கிலோ மீற்றர் வேகத்தில் பந்து வீசும் பந்து வீச்சாளர்கள் நம்மிடம் இல்லை. ஆனால் அதேநேரத்தில் சிறந்த சுழல் பந்து வீச்சாளர்கள் நம்மிடம் உள்ளனர்.

ஐ.பி.எல். போட்டிகளையும் ருவென்ரி -20 உலகக் கிண்ணப் போட்டியையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. ஐ.பி.எல். போட்டிகளால் திறமையான வீரர்கள் அணிக்குக் கிடைத்துள்ளனர்.

ருவென்ரி-20 உலகக் கிண்ணப் போட்டியில் சிறப்பாக விளையாடினோம். ஆனால், எதிர்பார்த்த முடிவுகள் நமக்குச் சாதகமாகக் கிடைக்காமல் போய் விட்டது என்றார்.




## புயல் வேக பந்து வீச்சாளர்



புயல் வேகத்தில் பந்துவீசி துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர் மால்கல் மார்ஷல்.

மேற்கிந்தியத் தீவுகளில் பார்படோஸில் உள்ள பிரிட்ஜ்டவுனில் 1958 ஆம் ஆண்டு பிறந்தார் மால்கம் டென்சில் மார்ஷல். அவரை மகோ என்று செல்லமாக அழைப்பர் அவரது சக அணியினர்.

வலது கை வேகப் பந்து வீச்சாளரான மார்ஷல், 1978 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் முதன் முதலாக களமிறங்கினார். அவர் பந்துவீச வந்தாலே துடுப்பாட்ட வீரர்களுக்குப் பயம் தொற்றிவிடும். அவரது பந்துவீச்சின் வேகம் தான் அதற்குக் காரணம்.

பந்துவீச்சிலும் மட்டுமல்லாது துடுப்பாட்டத்திலும் திறமையானவர். துடுப்பாட்டத்தின் போது 7 அல்லது 8 ஆவதாக களத்தில் இறங்கினாலும் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்கக் கூடியவர். களத்தில் கோபம் வந்தால் பந்துகள் மூலம் வெளிப்படுத்துவார்.

மேற்கிந்திய வேகப்பந்து வீச்சாளர்களிலேயே உயரம் குறைவானவர் (உயரம் 5 அடி 9 அங்குலம்).அவருடைய காலத்தில் இருந்த ஜொயல் கார்னர், அம்புரூஸ், கொர்ட்னி வோல்ஸ், கொலின் கிராப்ட் ஆகியோர் உயரம் 6 அடி 6 அங்குலம்.

81 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1810 ஓட்டங்களை எடுத்துள்ளார். 10 முறை அரைசதம் அடித்துள்ளார்.

அதிகபட்ச ஓட்டமாக 92. டெஸ்ட் போட்டிகளில் அவர் எடுத்துள்ள விக்கெட்டுகள் 376. ஒரே இனிங்ஸில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுகளை 22 முறை எடுத்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 10 விக்கெட்டுகளை 4 முறை எடுத்துள்ளார். அவரது சிறப்பான பந்துவீச்சு 22 ஓட்டங்கள் கொடுத்து 7 விக்கெட்டுகள் எடுத்தது.

அதேபோல 136 ஒருநாள் போட்டிகள் மூலம் 157 விக்கெட்டுகள் எடுத்துள்ளார். 2 முறை அரைசதம் அடித்துள்ளார்.

முதல் தர கிரிக்கெட்டில் 408 போட்டிகளில் விளையாடி 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ளார். 7 முறை சதம் அடித்துள்ளார். 1651 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

1982 முதல் 1986 வரை இவர் புகழின் உச்சத்தில் இருந்தார். உலகின் நம்பர் 1 பந்துவீச்சாளராக திகழ்ந்தார்.

1991 ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளிலிருந்தும் 92 ஆம் ஆண்டு ஒருநாள் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

ஓய்வுக்குப் பிறகு மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் ஹாம்ஷயர் அணிகளுக்குப் பயிற்சியாளராக இருந்தார்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1999 உலகக் கிண்ணப் போட்டியின் போது உடல் சுகவீனமடைந்தார். அப்போது தான் அவரை புற்றுநோய் தாக்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக சிகிச்சை மேற்கொண்டாலும் பலனளிக்காததால் 1999 நவம்பர் 4 ஆம் திகதி தனது 41 ஆவது வயதில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸ் அரசியலில் தந்தை, தாய் வழியில் பெனிக்னோ அகியுனோ

## உலக வலம்

ச.துஷ்யந்தினி

பிலிப்பைன்ஸ் தேர்தல்களில் புகழ்பெற்ற அரசியல் குடும்பத்தின் வாரிசு அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான சாத்தியங்கள் வெகுவாக அதிகரித்துள்ளன.

நாட்டின் அரசியல் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாக பதிவாகியிருக்கும் 'மக்கள் சக்தி' புரட்சிக்குத் தலைமை தாங்கிய முன்னாள் ஜனாதிபதி கொரசோன் அகியுனோவின் மகன் பெனிக்னோ அகியுனோ வெற்றியின் விளிம்பை நெருங்கியுள்ளார்.

புதிய ஜனாதிபதி, துணை ஜனாதிபதி மற்றும் 17 ஆயிரத்திற்கும் அதிகமான உயர் பதவிகளுக்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த திங்கட்கிழமை அங்கு நடைபெற்றது.



மிக மோசமான தேர்தல் வன்முறைகள் மற்றும் இலத்திரனியல் இயந்திரங்களின் மூலமான வாக்குப்பதிவுகளினால் ஏற்பட்ட தாமதங்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் பதிவு செய்யப்பட்ட 50 மில்லியன் வாக்காளர்களில் 75 வீதத்திற்கும் அதிகமானோர் வாக்களித்துள்ளதாக தேர்தல் ஆணையகம் தெரிவிக்கின்றது.

இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளில் பெனிக்கோ அகியுனோ 40 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று முன்னிலையில் இருக்கும் அதே வேளை, இவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்கள் 25 மற்றும் 14 வீத வாக்குகளையே பெற்றுள்ளனர்.

1980-90 வரையான காலப்பகுதியில் நாட்டின் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய அப்போதைய எதிரணி தலைவர் பெனிக்னோ அகியுனோ, ஜூனியர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி கொரசோன் அகியுனோவின் ஒரேயொரு மகன் என்பதே அரசியலில் பெரும் செல்வாக்கைப் பெற்றிராத பெனிக்னோ அகியுனோவின் வெற்றியின் இரகசியமென அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஜனநாயக விம்பங்களாக நாட்டு மக்களால் போற்றப்படும் பெற்றோரின் மகனென்பதே பெனிக்கோன அகியுனோவிற்கு ஆதரவு பெருகியமைக்கான காரணமாகக் கூறப்படுகிறது.

1960 பெப்ரவரி 08 இல் பிறந்த பெனிக்னோ சியோன் நொய்நொய் கொஜுயாங்கோ அகியுனோ (iii)பெனிக்னோ அகியுனோ கொரசோன் அகியுனோ தம்பதிகளின் மூன்றாவது குழந்தையாவார். அகியுனோ குடும்பத்தின் ஒரேயொரு ஆண் வாரிசான இவருக்கு 4 சகோதரிகள் உள்ளனர்.

1972இல் இராணுச் சட்டத்தை அமுல்படுத்திய அப்போதைய சர்வாதிகார ஆட்சியாளர் பெர்டினன்ட் மார்கோஸுக்கு எதிராக ஜனநாயகப் போராட்டத்தை நடத்திவந்த இவரது தந்தையான பெனிக்னோ அகியுனோ ஜூனியர் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய வேளை விமான நிலையத்தில் வைத்து மார்கோஸினால் படுகொலை செய்யப்பட்டார்.

இதன் பின்னர் ஜனநாயகப் போராட்டத்தை வழிநடத்திய கொரசோன் அகியுனோ 1986 இல் இடம்பெற்ற மிகப்பிரபலமான 'மக்கள் சக்தி' புரட்சிக்குத் தலைமை தாங்கியதன் மூலம் மார்க்கோஸின் சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

இதன் பின்னர் கிளர்ச்சிக் குழுக்களின் பல்வேறு சதிமுயற்சிகளையும் எதிர்கொண்டு 18 மாதங்கள் அதிகாரத்திலிருந்த கொரசோன் அகியுனோ 2009 செப்டெம்பர் 9இல் மரணமானார்.


மணிலா பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான பெனிக்னோ அகியுனோ லிபரல் கட்சியில் செயலாளர், துணைத்தலைவர் உள்ளிட்ட பதவிகளை வகித்ததுடன் பிலிப்பைன்ஸ் காங்கிரஸ் மற்றும் செனட் சபை உறுப்பினராகவும் தெரிவானார்.

எனினும், தாயாரின் மரணத்தின்போது அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காகத் திரண்ட மக்கள் வெள்ளத்தை கருத்தில் கொண்டே அரசியலில் உயர் பதவிக்கு போட்டியிடுவது குறித்த தீர்மானத்தை பெனிக்னோ மேற்கொண்டார்.

தாயார் மரணமடைந்து 40 நாட்களின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான அறிவிப்பை வெளியிட்ட பெனிக்னோ இன்று வெற்றியின் விளிம்பை எட்டியுள்ளார்.

வறுமை, ஊழல், அரசியல் வன்முறைகள், கிளர்ச்சிக் குழுக்களின் நடவடிக்கைகள் மற்றும் இராணுவத்திற்குள் குழப்பநிலை போன்றவற்றுடன் பேராடும் பிலிப்பைன்ஸை ஸ்திரமானதொரு நாடாகக் கட்டியெழுப்புவதே பெனிக்னோ அகியுனோவின் இலக்காகும்.

இவ்விலக்கை அடைவதற்கு உறுதியானதொரு அரசாங்கத்தை உருவாக்க வேண்டியது அவசியமென்பதை உணர்ந்துள்ள பெனிக்னோ அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



தந்தையின் கனவுகளை நனவாக்கும் முயற்சிகளை தீவிரமாக்குவதற்கு உறுதிபூண்டுள்ள பெனிக்னோ, கடந்த ஒக்டோபர் வரை பரபரப்பற்ற அமைதியானதொரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தவர்.


இந்நிலையில் பெற்றோரின் செல்வாக்கின் மூலம் அதிகாரத்திற்கு வந்துள்ள பெனிக்னோ அகியுனோ நாட்டில் வரவேற்கத்தக்கதொரு மாற்றத்தை ஏற்படுத்துவாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்



# 'எனது சாதி இந்தியன்'



இந்தியாவில் சாதி அடிப்படையில் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று பல அரசியல் கட்சிகள் கோரிக்கைவிடுத்து வருகின்றன. இது தொடர்பில் பெரும் விவாதங்கள் மூண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால், இந்தித் திரையுலகின் முடிசூடாமன்னனாக விளங்கும் அமிதாப் பச்சான் சாதியின் பெயரில் சனத்தொகைக் கணக்கெடுப்பு செய்வதற்கு தனது இல்லத்துக்கு குடிசன மதிப்பீட்டு இலாகா அதிகாரிகள் வந்தால் அவர்களிடம் தனது சாதி 'இந்தியன்' என்றே கூறவிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

தனது தந்தையாரான பிரபல இந்தி கவிஞரும் இலக்கியலாதியுமான ஹரிவான்ஷ் ராய் பச்சான் சாதி அமைப்பு முறையில் ஒருபோதுமே நம்பிக்கை கொண்டிருந்ததில்லை என்று அமிதாப் பச்சான் கூறுகிறார்.

'எனது தந்தைக்கோ எங்களில் எவருக்குமோ சாதியில் நம்பிக்கையில்லை. தந்தை சீக்கியப் பெண்ணையே திருமணம் செய்தார். தாயார் தெஜி பச்சான் சீக்கியப் பெண், நான் ஒரு வங்காளப் பெண்ணான ஜெபா பாதுரியையே திருமணம் செய்திருக்கிறேன். எனது சகோதரன் ஒரு இந்தி இனப் பெண்ணையே திருமணம் செய்திருக்கிறார். எனது மகள் ஷுவேதா ஒரு பஞ்சாபியரை திருமணம் செய்திருக்கிறார். மகன் அபிஷேக் பங்களூர்காரியான ஐஸ்வர்யா ராயைத் திருமணம் செய்திருக்கிறார். எனது தந்தையார் தனது சுயசரிதையில் தனது குடும்பத்தின் எதிர்காலச் சந்ததிகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் திருமணம் செய்ய வேண்டும் என்று எழுதியிருக்கிறார். அந்த விருப்பத்துக்கு இணங்கவே எமது குடும்பங்களுக்குள் திருமணங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. அந்த நடைமுறையை எமது குடும்பங்கள் தொடரும்' என்று அமிதாப் பச்சான் கூறியிருக்கிறார்.

சாதி அடிப்படையில் இந்தியாவில் விரைவில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுமென்று பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

# உலகிலேயே மிகவும் பாலியல் கவர்ச்சியுடைய பெண்மணி

அமெரிக்காவின் சூர்ப்பர் மொடல் அழகி மரிசா மில்லர் உலகிலேயே மிகவும் பாலியல் கவர்ச்சியுடைய பெண்ணாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

FHM சஞ்சிகையின் வாசகர்கள் மத்தியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு ஒன்றின் மூலமே இத்தெரிவு இடம் பெற்றிருக்கிறது.

கடந்த வருடம் ஹொலிவூட் நடிகை மெகான் ஃபொர்க்ஸ் உலகிலேயே மிகவும் பாலியல் கவர்ச்சியான பெண்ணாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். தற்போது அந்தப் பட்டத்தை அவரிடமிருந்து மரிசா மில்லர் தட்டிக் கொண்டார்.

கலிபோர்னியாவின் சாந்தா குரூஸ் பகுதியைச் சேர்ந்த மரிசா மில்லர் (வயது 31) இசையமைப்பாளர் கிறிபின் கெஸ்ஸை திருமணம் செய்திருக்கிறார். 16 வயதில் இருந்தே அவர் மொடல் அழகியாக இருந்து வருகிறார்.

பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சீனா, பிரான்ஸ், இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற பல நாடுகளில் உள்ள FHM சஞ்சிகையில் 24 சர்வதேசப்பதிப்புகளின் வாசகர்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.



இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15 [illegible] 2010 ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org